உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ரு.	சுக்கில—வைகாசி.	மலர் உ.

ஓம்

தமிழரும் ஆடையும்.

திருவாளர், வீ. உலகவூழியரவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
பூனாமேடு.

வட வேங்கடம் தென்குமரி ஆயிடைப்பட்ட நாட்டில் உறையும் மக்கள் தமிழர் எனப் பெயர் பெறுவர்.* முற்காலத்துத் தமிழர் நெசவுத்தொழிலில் எந்நிலையில் இருந்தனர்; இக்காலத்து எந்நிலையில் இருக்கின்றனர் என்பனவற்றை ஆராய்வதற்கெழுந்தது இக்கட்டுரை.

மிக்க பழங்காலத்தில் மக்கள் ஆடை அணிகலம் முதலியவின்றி வதிந்து வந்தனர்; பின்னர், இயற்கையாகக் கிடைப்பன சில்வற்றை உடுத்திவந்தனர் என்று ஆராய்ச்சிக்காரர் கூறுவர்.

* பிறநாட்டுக்குடியேறி இருக்கும் தமிழரும் உளர். இந்நாட்டுக்குடி வந்திருக்கும் பிற மொழியாளருமுளர். எனவே தமிழ் மொழியில் மொழிவோர் தமிழர் என்றபடி.

இவ்வாறு இயற்கையாக அவர்கட்கு எளிதிற் கிடைக்கப்பட்ட ஆடைகள் ஒருவகைத் தழையும், மாவுரியுமாம். அகத்திணைக் கண் தலைவன் தலைவிக்கெனத் தோழிபால் தழைகொடுத்தல், தோழி அதனை மறுத்தல் முதலிய துறைகள் கூறப்பட்டிருப்பன இக்கொள்கையை நன்கு வலியுறுத்துகின்றன. அக்காலத்தி லிருந்த முனிவர் மாவுரியுடுத்திவந்தனர் என்பதனைப் பழைய நிகழ்ச்சிகளைப்பற்றி மிகுதியாகக் கூறிய முருகாற்றுப்படையால் அறிக. இனி, அணிந்துவந்த அணிகளைப்பற்றி ஆராயுமிடத்து, வெண்பொன், செம்பொன்களாற் செய்யப்படாத இயற்கை அணிகளையே மக்கள் அணிந்துவந்தார்கள் என்பதனை அவ்வணி கட்குரிய பெயர்களும் சங்கச்செய்யுள் சிலவும் தெரிவிக்கின்றன. குழை, ஓலை, தோடு, முருகுப்பூ, கொப்பு, திருகுப்பூ என்பன வற்றை எடுத்துக்கொள்வோம். குழை-தளிர். இச்சொல் ஒரு வகையான இளந்தளிரை அணிந்து வந்தனர் என்பதனை நினை வூட்டுகின்றது. ஓலை என்னும் பெயரால், பனை முதலியவற்றின் ஓலையை வளைத்துக்காதில் அணிந்துவந்தனர் என அறிகின்றோம்; இக்காலத்தும், பனையோலையைச் சுருட்டிக் காதிலணியும் வழக் குண்டு. தோடு-பூவிதழ்; பனையோலையையும் குறிக்கும்; பூ விதழை அணிந்துவந்தனர் என்பதனை விளக்குகின்றது. முரு குப்பூ-மணநாறும்பூ. இக்காலத்து முருவுப்பூ என வழங்குகின் றனர்; மணமுடைய பூவை அணிந்துவந்தனர் என்பதனை இச் சொல் விளக்குகின்றது. கொப்பு-கொம்புப்பூ என்பது கொப்பு என மருவிற்று. இது மரக்கொம்பிலுள்ள பூக்களை அணிந்து வந்தனர் என்பதனை விளக்குகின்றது. திருகுப்பூ-முறுக்குதலை யுடையபூ. இதனால் முறுக்குண்ட வடிவுடைப் பூக்களை அணிந்து வந்தனர் என அறிகின்றோம். பிறவும் இன்னன.

இனி,

*“ துணையோர் ஆய்ந்த இணையிர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சிறிதழ் இடை இடுபு”

---

* இப்பகுதி சூராமகளிரைப்பற்றிக் கூறியதேனும் தமிழ்நாட்டு நிகழ்ச்சியாதலின் அன்னோருந் தமிழருள் ஒரு வகுப்பினராதலின் அமையும் என்க.

"முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்ப" (திருமுருகாற்றுப்படை)

எனவரும் நக்கீரனார் வாய்ச்சொல், செய்யுள் வழக்கில் மேற்கூறிய வற்றை வலியுறுத்தியமை காண்க.

முற்காலத்து இயற்கையாகக் கிடைத்த தழை முதலிய உடைகளையுடுத்தி வந்தனர் என்னுங் கொள்கையை வலியுறுத் தற்கு, உடையொடு இயைபுடைய இயற்கை அணிகளை எடுத்துக் காட்டினமையின் இப்பகுதி இடைப்பிறவரல் அன்று.

சிலகாலம் விலங்கு முதலியவற்றின் தோல்களை மக்கள் அணிந்து வந்தனர். இதனை "இதழோன்" என்று சங்கச் செய்யுளுள் வரும் சொல்லாற்றலால் உணர்க. படிப்படியாக நிகழ்ந்த வரலாற்றைக் கேள்வி வாயிலாகச் சங்கப்புலவர் கூறின ராதலின் இவையெலாம் அன்னார் காலத்துள வென்று கோடல் குற்றமாம். பின், தமிழர் ஆடைகட்டும் உயரிய நாகரிகத்தை எக்காலத்துப் பெற்றனர் என்று அறுதியிட்டுக்கூற யாருந்துணி யார். சுருங்கக் கூறின் பல்லாயிரமாண்டுகட்கு முன்னரே தமிழர் இந்நாகரிகத்திற் சிறந்தவர் என்னல் ஆம். மக்கட்கும் ஏனையவிலங்கு முதலியவற்றிற்கும் உள்ள வேற்றுமைகள் பல வற்றுள் ஒன்றாக ஆடையுடுத்தலைச் சிலர் சொல்கின்றனர். ஆடையின்றி மக்கள் உலகில் வாழமுடியாது.* ஒருவனுண வின்றிப் பத்துப் பகல் இருபது பகல் இருந்துவிட முடியும்.

---

* அமெரிக்காவிலொரு கூட்டத்தார் ஆடையின்றி இருக்கமுனைகின் றனராம். இவர்கள் முதுமைப் பருவத்தை வெறுத்துக் குழவிப் பரு வத்தை விரும்புகின்றனர் போலும். இவர்கள் பேறிவு வாய்க்கப்பெற்றவ ராதலின் உணவையும், உடலையும்கூடத் துறந்து விடுவர் போலும்.

ஆனல் ஆடையின்றி ஒரு மாத்திரையிருப்பின் உலகம் அவனைப் பித்தனென்று எள்ளும்; இகழும்; ஒதுக்கும். உலகில் நாகரிகம் பெற்ற எவ்விடத்தும் ஆடையிலா மக்களைக் காண்டலரிது. மக்கட்கு ஆடை அணி செய்வதாகும். சுந்தரர் இறைவர்பால் தமக்குப் பட்டாடை ஈதல் வேண்டுமென வேண்டியதுமறிக. அற்றேல் "குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்...... அழகல்ல" என்று கூறியது வழுவாம் பிற எனின்; நன்று சொன்னுய்! ஆடை அழகொன்றையே விரும்பி அறிவழகு பெருதவர் அழகாற் சமைந்த மண்ணீட்டொடு ஒப்பர்; அறிவிலாதவர் அழகு அழகாகாது என்று கூற எழுந்ததாகலின் குற்றமாகாதென்க. மக்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்றுய ஆடையைப் பற்றிய குறிப்புக்கள் பல நம் பழந்தமிழ் நூலகத்துள்ளவற்றுட் சிலவற்றை எடுத்துக்காட்டுவாம். பண்டைத் தமிழர் பருத்தி, பட்டு, மயிர் என்னும் மூவகை இழைகளாலும் செய்யப்பட்ட ஆடைகளை அணிந்து வந்தனர்; பிற நாட்டிற்கு அனுப்புதல் செய்து வந்தனர் என்றறிகின்றேம். கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றுண்டுகட்கு முன்னர் உரோம நாட்டு (Rome) அரசமகளிர் கட்டு மாடைகள் தமிழர்களால் நெய்யப்பட்ட விலைமதிப்பில்லாப் புடவைகளென்று ஆராய்ச்சியறிவுடையார் கூறுகின்றனர். பருத்தி விளைவினைத் தமிழர் பெரிதும் பேணி வந்தனர். தமிழர் தம் தமிழ் மொழியின்பால் எவ்வளவு பற்று வைத்திருந்தனரோ அவ்வளவு பற்றுப் பஞ்சின் மேல் வைத்திருந்தனர். பனுவல் என்னும் சொற்குப் பருத்தி, சுகிர்ந்த பஞ்சு எனவும், இசை, கேள்வி, சொல் எனவும் பொருள் கொண்டுளார். "பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன" என்னும் அடியுள்ள பனுவல் என்னும் சொற்கு (புறம்—125) அந்நூலுரையாசிரியர் சுகிர்ந்த பஞ்சு என உரை செய்திருத்தலும்

"மைபடு மாமழை பனுவலிற் பொங்கிக்
கைதோய் வன்ன கார்மழைத் தொழுதி"(மலைபடு-361-362)

என்னும் பகுதியுளுள்ள பனுவலெனும் சொற்கு ஆசிரியர் நச்சினுர்க்கினியர் எஃகுறு பஞ்சு எனப் பொருள் கொண்டிருத்த

னும் பனுவல் என்னும் சொற்குப் பஞ்சென்னும் பொருளுண்மையை வலியுறுத்துகின்றன. பனுவல் என்னும் சொற்கு இசை, கேள்வி, சொல் என்னும் பொருள்களுண்மை வெளிப்படை. இசையினை யுணர்த்தும் பனுவலென்னும் சொல்லைச் சுகிர்ந்த (ஆராய்ந்த) பஞ்சினை உணர்த்தற்கு வழங்கிவந்தார் எனின் அன்னார் பஞ்சினிடத்துக் கொண்டுள்ள மதிப்பினை அளப்பார் யாரே? சிலர், சொல்லுவான் ஆற்றலாற் கூறும் நயமாகும் இஃது உண்மைப் பொருளன்று. தமிழ் மொழியில் இவ்வாறு கூறுதல் தமிழர் இயல்பு என்று கூறுவர். அன்னார் அறியார், அறியார். பனுவல் எனுஞ் சொல் பஞ்சினையும், சொல், பாட்டு, இசையினையும் உணர்த்துகின்றது. பஞ்சாலாக்கப்படுவது நூல். பாட்டால் அல்லது சொல்லால் ஆக்கப்படுவது நூல். பனுவல் என்னும் சொல் பஞ்சினையும் பாட்டு முதலியவற்றையு முணர்த்துமாறுபோலவே, நூல் என்னுஞ் சொல் பஞ்சு நூலையும், இலக்கண நூலையும் உணர்த்துமாறு காண்க. இனிப் பாட்டைப் "பாவி நடத்தலில் பாவே" என்று கூறுதலின் பாவு தொழிலும், பாடற்றொழிலும் ஒத்திருத்தல் காண்க.

"பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்* முடியு மாறு." (நன்னூல் பொது-23)

என ஆசிரியர் பவணந்தியார் கூறியிருத்தல் இக்கொள்கையை வலியுறுத்தல் காண்க. இறையனார் அகப்பொருள் உரையாசிரி

---

* நூல் என்னும் சொல் தந்திரமென்னும் வடமொழியைப் பார்த்து மொழிபெயர்த் துரைக்கப்பட்டதென்று சிலர் கூறுவர். பனுவல், பா, நூல் முதலிய இயைபு ஆண்டைப் பெறப்படாமையானும், தந்திரமென்னும் வடமொழிச் சொற்குப் புதிது என்னும் பொருள் முதற்கண் வழங்கப்பட்டுப் பின்னர் நூல் எனும் பொருள் வழங்கப்பட்டமையானும், வடமொழியில் தந்திரமென நூலைக் குறிப்பிடுவதற்கு முன்னரே தமிழ்மொழியில் நூலெனுஞ் சொல் அப்பொருளைக் குறித்து வழங்கப்பட்டுண்மையானும் அன்னார் தமிழ்மொழியியல்புணராத தண்ணியரென்க.

யர்க்கும் இது கருத்தாதல் அன்னாருரையிற் காண்க. மகட்கொடை நேராத ஊர் குறித்து அடைநெடுங்கல்வியார் என்னும் புலவர் இரங்கிக் கூறிய ஓர் செய்யுளுள் அவ்வூரைப் * "பன்னல் வேலிஇப் பணைநல் லூரே" எனக் கூறியுள்ளார் (புறம்-345) பருத்தியாகிய வேலி சூழப்பட்ட இந்தப் பெரிய ஊரென்று உரை கூறுதல் இவர் கருத்துக் குடன்பாடாம். பொன்முடியா ரென்னும் புலமுடைமகளார் "பருத்தி வேலிச் சீறூர் மன்னன்" (புறம்-299) எனக் கூறியுள்ளார். ஆலத்தூர்க் கிழாரென்னும் வேளாண் புலவர்

"வெருக்குவிடை யன்ன வெகுள்நோக்குக் கயந்தலைப்
புள்ளூன் தின்ற புலவுநாறு கயவாய்
வெள்வாய் வேட்டுவர் விழ்துணை மகாஅர்
சிறியிலை உடையின் சுரையுடை வான்முள்
ஊக நுண்கோற் செறித்த அம்பின்
வலாஅர் வல்வில் குலாவரக் கோலிப்
பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலந் தழீஇய அங்குடிச் சீறூர்" (புறம்-324) எனக்
கூறியுள்ளார்.

† காட்டுப்பூனையினது ஆணையொத்த வெகுண்ட பார்வையையும், மெல்லிய தலையினையும், பறவை இறைச்சி தின்றதினால் புலால் நாறும் மெல்லிய வாயையுமுடைய (விளர்த்த வாயையுடைய வேடர்களுடைய விருப்பம் தரும்) இளஞ்சிறார்-புள்ளூன் தின்றும் அமையாமல்- சிறிய இலைகளையுடைய உடை மரத்தினது துளையுடைய வெள்ளிய முள்ளினைச் சிறிய ஊகங் கோலிற் கோத்த அம்பினை உடையராய் வளாராலாகிய வில்லை நன்றாக வளைத்துப் பருத்திச் செடிகள் பயிராகியிருக்கு நிலத்து எலிகளை எய்தற்குக்

* பனுவல் எனுஞ் சொற்குள இருவகைப் பொருள் போலவே பன்னலெனுஞ் சொற்கும் பஞ்சு, சொல் என்னும் பொருள் உண்மையறிக.

† கூர்த்துப் பார்க்கும் கண்ணும், மெல்லிய தலையும் கொண்டிருத்தலுடன் புள்ளூன் தினலும், எலி பிடித்தலும் ஆகிய தொழிலுடைமையின் காட்டுப் பூனைகள் வேடச்சிறார்களுக்கு உவமையாயின.

குறிபார்க்கும் புன்செய் நிலம் புடைசூழ்ந்த சிற்றூர் என்பது இதன் பொருளாகும். மேற்காட்டிய செய்யுட்களின் பகுதிகளால் பருத்தி விளைவது முரம்பு நிலமென்பதும், தமிழ் நாட்டுப் பருத்தி விளைவு மிகுதி என்பதும் போதருகின்றன. பஞ்சின் குவியல் மிகுதியைப் பொதி என்பர். பஞ்சுப் பொதியில் தீப் பிடித்தாற் போல் என்னும் பழமொழியும், "பன்னலம் பஞ்சிக் குன்றம் பட்டெரி முகந்ததொப்ப" (சிந்தா—2274) என்னும் செய்யுள் வழக்கும், பஞ்சுத் திரளின் மிகுதியை உணர்த்துகின்றன. இப் பருத்திப் பஞ்சை ஆராய்ந்து கதிரில் கொடுத்தற் பொருட்டு, திரைத்த சிறு சுருட்டினை கொட்டை என்று கூறுவர். "கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி—வடிவினளே வஞ்சி மகள்" என்னும் பழம் செய்யுட்கண், இப் பொருளில் கொட்டை என்னும் சொல் வழங்கப்பட்டிருத்தலறிக.

நூல், இழையென்பன ஒரு பெயர்க்கிளவிகள். நூற்கப்படுதலின் நூல் என்றாயிற்று. இழைக்கப்படுதலின் இழை என்றாயிற்று. "நோக்குநுழை கல்லா நுண்மைய" (பொருநர்-82) இவ்வடி, கண்ணிற் பார்வை இழைபோன வழியிஃதென்று குறித்துப் பார்க்க வாராத அவ்வளவு நுண்மையை உடையன என்னும் பொருளை வெளிப்படுத்தலின் மிகநுண்ணிய நூல்களைத் தமிழர்கள் நூற்று வந்தனர் என அறிக. நூல் நுண்மையதாய் நூற்கப்பட்டதனால் அன்றோ மகளிரிடைக்கு அதனை உவமை கூறினர்; தமிழர் நூல் நூற்கும் பயிற்சி மிக நீண்ட காலமாகத் தமிழ் நாட்டில் நிலவி வந்தது. என்னை? இயல் நூல் உரையாசிரியர் தமிழ் நூலுக்கு நூல் எனும் பெயரிடப்பட்ட காரணம் கூறுமிடத்து, நூற்கப்படும் "நூல் போறலின் நூலென்ப" என்று கூறினர் ஆதலின். பட்டிழையும் மயிரிழையும் (கம்பல நூல்) தமிழரிழைத்து வந்தனர். பின்னர்க் காட்டுதும்.

உடைகள்.

ஒரு பொருளுக்குப் பலபெயர்கள், ஒரு மொழியில் வழங்குமேல் அவை அப்பொருளின் சிறப்பையும் மலிவையுமுணர்த்தும். இவ்வாறு கூறுதல் மொழி நூலுடையாரது கருத்து.

* அறுவை, உடுக்கை, உடை, கிழி, துணி, துண்டு, வெட்டி வேட்டி, சிதார், ஆடை, கூறை, போர்வை, துகில், படாம், சீலை, புடவை முதலிய சொற்கள் உடையைக் குறிக்கின்றன. அறுக்கப்படுதலால் அறுவை; உடுக்கப்படுதலான் உடுக்கை, உடை; கிழிக்கப்படுதலால் கிழி; துண்டு படுத்தப்படுதலால் — துணி துண்டு; வெட்டப்படுதலான்—வெட்டி, வேட்டி எனக் காரணக் குறி பெற்றன. இஃதறியும் மதுகையிலார் வேட்டி என்பது வேஷ்டி என்பதன் தற்பவம் என்பர். † விட்டை எனுஞ் சொல்லை விஷ்டை எனத்திரித்துக்கொண்டாற்போல் வேட்டி என்னும் சொல்லை வேஷ்டி எனத்திரித்துக்கொண்டார் எனல் பொருத்தமாதலறிக. மயிர் தமிழர்க்கு முளைப்பதில்லை! தங்கட்கே உரியது என்று அதனையுணர்த்தும் சொல்லையுங்கூட ஸ்மஸ்ரூ என்னும் சொல்லிலிருந்து தோன்றிற்று என்று கூறும் அன்னார், வேட்டி என்பது வேஷ்டி என்னும் சொல்லினின்றும் தோன்றியதென்று கூறுதலில் வியப்பென்னை?

சிதார்—தைபலொடு பொருந்திய பொத்தற்றுண்டு. "துன்னற் சிதாஅர் துவர நீக்கி (பொருநர்—81) என்பதனுல் இப்பொருளுண்மையறிக. ஆடை—உடம்பின்மேல் அடுத்துப் பொருந்துவது; தமிழொடு இயைபுடைய தெலுங்கு மொழியில் இச் சொல் மீ அடை என வழங்கப்படுகின்றது; ஆதலின் ஆடை உடைக்குக் காரணக்குறியாயிற்று. கூறை—கூறுபடுத்தப்படுவது; (அன்றி நூலால் வேயப்படுதலால் இப் பெயர் பெற்றதெனினும் அமையும்; இப்பொருளில் ஈற்றுயிர் ஏறிய மெய் ஒலி ஒற்றுமை நோக்கித்திரிந்ததெனக்கோடல் வேண்டும்.) போர்வை—வெளிப்படை. துகில்—மொழிப் பொருட் காரணம் விழிப்பத்தெரிந்திலது. படாம்—படர்தல் பாவல் என்னும் சொற்கட்கு ஒரு புடை ஒத்துக்காணப்படுதலின் போராடையைக் குறிக்கும். இப்

---

* கலிங்கம் முதலாக வருஞ்சொற்கள் ஆடையைக் குறிப்பெனவேனும் அவை பிறநாட்டிலிருந்து வந்தன. ஆகையால் அவை அந்நாட்டில் செய்யப்பட்டன.

† விட்டை என்பதனுள் விடு என்பது முதல்நிலை.

பொருளில் வழக்கப்படுதலை, "சித்திரச் செய்கைப் படாம் போர்த் ததுவே-ஒப்பத்தோன்றிய உவவனம்" (மணிமேகலை) என்றுதனுல் அறிக. மாவுரியை உணர்த்திவந்த சீரை என்னுஞ்சொல் காலப் போக்கில் ஆடையை உணர்த்தி நின்றது. அதன் ஈற்றுயிர் ஏறிய ரகாம் லகாமாய்த் திரிந்து மருவலாற் சீலை என்றுயிற்று; ஆரை, ஆலை என நின்றுற்போல. புடவை—புடைவை என்னும் சொல்லின் மரூஉ; உடற் புடை உடுத்தி வைக்கப்படுவது என்பது இதன் பொருளாம். இவையே அன்றி எழினி முதலாக வனைய வும் உள.* "ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்—காந்து வர லெழினியும்" (சிலப்பதி.) என்பதனுல் அறிக.

"பூக்கனிந்து—அரவுரி யன்ன அறுவை நல்கி"-(பொருநர்-83) பூவேலை முற்றுப்பெற்ற, பாம்பின்சட்டையை ஒத்த மெல்லிய ஆடை என்பது இதன் பொருள். "காம்புசொலித் தன்ன அறுவை"—(சிறுபாண்-236) மூங்கில் ஆடையை உரித்தால் ஒத்த உடை என்பது இதன் பொருள். இங்கு எடுத்துக்காட்டப் பட்டவற்றுல் மெல்லிய ஆடைகளும், பூவேலை செய்யப்பட்ட ஆடைகளும் நெய்யப்பட்டு வந்தன என அறிகின்றும். பஞ்சினை ஆடையாக்குதற்குப் படிப்படியாகப் பல வேலைகள் செய்யப்பட்டு வந்தன. இதனை, "நான்படும் பாடு சிவமே உலகர் நவிலும் பஞ்சு, தான்படுமோ" "பஞ்சுபடும் பாடுபடும் பாவி" என்னும் திருவாய்மொழிகளும், "பருத்தி புடவையாகக் காய்த்தாற் போல்" என்னும் பழமொழியும் வெளிப்படுத்துகின்றன. பஞ்சு நூல் நூற்கும் தொழிலைப் பெரும்பாலும் பெண்களே மேற் கொண்டிருந்தார்கள்; என்னை? "பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன" (புறம்-125), "செஞ்சொற் புலவனே சேயிழையா" என்பனவற்றுல் அறிகின்றுமாதலின். பெண்டிருள்ளும் கணவனை இழந்த விதவைகள் இத்தொழிலைப் பெரிதும் செய்து, இத் தொழிலால் வரும் ஊதியத்தால் வருத்தமின்றி வாழ்ந்து வந்தனர். † வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலனர் காற்றுல் அலைக்கப் படும் மழையினது த்வழ்தற்கு உவமை கூறுங்கால் "ஆள்இல்

* எழினி—திரைசீலை. † வெறுத்த=செறிந்த.

பெண்டிர் தாளிற்செய்த—நுணங்குநுண் பனுவல்போலத் (தவழும்)" (நற்றிணை-353) எனக் கூறுதலான் இவ்வுண்மை விளங்குமாறறிக. தமிழர் நெசவுத்தொழிலில் நன்குபயின்றிருந்தமையான் அன்றோ "பாவிடை ஆடுகுழல்போல் கரந்து பரந்துள்ளம்" (திருவா-அடைக்க) என்னும் அடியுள் உலகப்பற்றற்ற அடிகள் மாணிக்கவாசகனார் உள்ளத்தின் அலைவினுக்குப் பாவிடை ஓடும் குழல் அலைப்பினை உவமை கூறியருளினர்.

பஞ்சு நூலாடையேயன்றிப் பட்டாலும் மயிராலும் ஆகிய இழைகளால் ஆடைகள் நெய்துவந்தனர் என்பதனை "கொட்டைக் கரைய பட்டுடை நல்கி (பொருநர்-155) என்பதனாலும், 'செந்நெருப்புணுஞ் * செவ்வெலிம்மயிர்—அந்நெருப்புஅளவு ஆய் பொற் கம்பலம்" (சிந்தாமணி—2686) என்பதனாலும் அறிக. பட்டிழையினாலும் மயிரிழையினாலும் கலந்தாக்கிய ஒருவகையாடையும் நெய்து வந்தனர் என்பதனை

"உருவம் ஆர்ந்தன உரோமப் பட்டுடுத்து (சிந்தா-2425) என்பதனால் அறிக. பெரிய நகரங்களுள் நெசவுத் தொழிலாளர்கட்குத் தனித்தனித் தெருக்கள் அமைக்கப்பட்டிருந்தன; இவ்வுண்மையைப் "பட்டினும் மயிரினும் பருத்திநூலினும்—கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்" (சிலப்பதி—இந்தி) என்னும் இளங்கோவடிகள் வாக்கால் அறிக.

அன்பர்களே, நமது நாட்டில் முன்னாள் நம்முன்னோர் முயற்சியால் நெய்தற்றொழில் மேலோங்கி நின்றது. அதனால் தாம் உடுத்திக்கொண்டன போக எஞ்சிய ஆடைகளைப் பிறநாட்டினரிடம் விற்றுப் பெருஞ்செல்வந் திரட்டி வாழ்ந்தனர் என அறிகின்றோம். இற்றைநாள் நாம் மடியரினும் மடியராய் மக்கட்கின்றியமையாச் சிறப்பினையுடைய உடையினைச் செய்யுந்தொழிலை விட்டொழித்தோம்; பிறநாட்டாரை எதிர்நோக்குகின்றோம். பிறர் நமக்கு உடை உதவாதொழிவாரேல், அமரிக்க நாட்டில்

* எலி மயிர்—நுண்ணியமயிர்; இப்பொருள் படுதற்பொருட்டாக ஆசிரியர் செம்மை என்னும் அடைமொழியைப் புணர்த்தியுள்ளார்.

தோன்றியுள்ள அம் மணக்கழகத்தில் உறுப்பினராதலன்றி வேறென் செய்வோம். உலகப் பெரும்போர் (Great war) நடந்தஞான்று நமது நாட்டார் ஆடையின்றி உற்ற துன்பத்தை நாம் அறியவில்லையா? அத்தொழிலைக் கைவிட்டதனால் நமது நாட்டினின்று பிறர்நாட்டுக்குக் கணக்கிறந்த பொருள்கள் போகின்றன அல்லவா? ஆதலின் உள்ளத்தெழுச்சி கொண்டு நெசவுத் தொழிலில் தலைசிறந்து நிற்பீர்களாக! தெய்வப்புலவர் திருவள்ளுவனார் செய்த நெசவுத் தொழிலைக் கைக்கொள்வீர்களாக! பிற உயிர்க்குச் சிறிதும் தீங்கு இழைக்காத சீரிய தொழில் இது என்பது ஆன்றோர் எல்லாரும் ஒப்புக்கொண்டதன்றோ?

"பட்டினிலாடையும் பஞ்சிலுடையும்
பண்ணிமலைகள் எனவீதிகுவிப்போம்.
கட்டித்திரவியங்கள் கொண்டுவருவார்
காசினிவணிகருக்கவைகொடுப்போம்."

(செந்நாப்புலவர்—பாரதியார்.)

௳

உள்ளம்.

திருவாளர், இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், தலைமைத் தமிழ்ப்பண்டிதர், போர்டு உயர்தரப்பள்ளிக்கூடம், நாங்குனேரி.

உள்ளம் என்பது யாது? இதனை இத்தன்மையதென ஆராய்ந்து முடிவுகட்ட முடியாதொழியினும் ஒருவகையாய் அது நமது எண்ணங்களுக்குக் காரணமாயது எனக்கூறலாம். ஒரு நாற்காலியின் கால்கள் எவ்விதம் அந்நாற்காலியோடு சேர்ந்துள்ளனவோ அவ்விதமே நமது எண்ணங்களும் நமது உள்ளத்தோடு சேர்ந்துள்ளன. உள்ளத்தின் வேறாய் அவ்வெண்ணங்களைப் பிரித்துத் தனித்தனியாக நினைவது நன்றன்று. விரும்புதலும் அறிதலும் அடைதலும் ஆகிய இவைகளே உள்ளத்தின் தன்மைகள்.

உள்ளமானது வெளியிலிருக்கும் பொருள்களோடு மூளை நரம்பமைப்புக்களின் வழியாகக் கலத்தல் கூடும். இதனால் உள்ளத்துக்கு இருப்பிடமாவது மூளை என அறியலாம்.

மூளை என்பது தலையிலுள்ள எலும்புக்கூட்டுக்குட் கிடக்கும் வெண்மையும் சாம்பலும் கலந்த நிறத்தோடுகூடிய பொருளாம். அது மிகவும் வியப்படையுமாறு மிக மெல்லிய நரம்புகளாலும் நரம்பு முடிச்சுக்களாலும் ஆக்கப்பட்டுள்ளது. இந் நரம்பு முடிச்சுக்கள் மூளையின் எல்லாப்பக்கங்களிலும் காணப்படும். மேலும் இவைகளே மரத்துக்குப் பட்டையைப்போல மேற் போர்வையாக அமைந்துள்ளன. இந் நரம்பு முடிச்சுக்களே நமது எண்ணங்கள் தோன்றும் இடங்களாம்.

இவைகளை ஒன்றுடனொன்று பொருத்துவன நரம்புகளே. இந் நரம்புகளின் வழியாகவே எண்ணங்கள் பரவுகின்றன.

உடம்பில் எந்த இடத்தில் தொட்டாலும் உணர்ச்சி உண்டாகிறது. ஏனெனில் உணர்ச்சிக்குக் காரணமான நரம்புகள் உடலெங்கும் பரவியிருக்கின்றன ; அவை பரவாத இடமே இல்லை. நரம்புகளின் வழிவாக ஓர் வல்லமை ஓடுகிறது. இதையே 'நரம் போட்டம்' அல்லது 'நரம்பு ஊக்கம்' என்று சொல்லுகிறார்கள். மின்சாரம் ஓடும் கம்பிகளில் அது வெளிப்போகாவண்ணம் ஓர் பாதுகாப்பு அக்கம்பிகளின் மேல் அமைக்கப்பெற்றிருக்கிறது. அதுபோலவே, நரம்புகளில் ஓடும் உணர்ச்சி வெளிப்படாமற் பாதுகாக்குமாறு நாம்புகளின்மேல் கொழுப்பால் ஓர் பாதுகாப்பு அமைக்கப்பட்டிருக்கிறது.

நரம்புகள் இரண்டு வகைப்படும். அவை—உணர்ச்சி நரம்புகளென்றும், கட்டளை நரம்புகளென்றும் பெயர் பெறும். உடலில் ஏனைய இடங்களிலிருந்து மூளைக்குச் செய்தியைக் கொண்டுபோகிறவைகளே உணர்ச்சி நரப்புகளாம். இவைகளாலேதான் உணர்ச்சி ஏற்படுகிறது. கட்டளை நரம்புகள் மூளையிலிருந்து வெளியிலுள்ள உறுப்புக்களுக்குக் கட்டளையைக் கொண்டுபோகின்றன. இவைகளாலேயே உடலில் அசைவு ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, காலில் ஓர் முள் தைக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அச் செய்தியை உடனே உணர்ச்சி நரம்புகள் மூளைக்குக் கொண்டுபோகின்றன. மூளை உடனே காலுக்குத் தூக்கும்படியும், கைக்கு அம்முள்ளை எடுக்கும்படியும் கட்டளையிடுகிறது. அக் கட்டளைகளைக் கட்டளை நரம்புகள் காலுக்கும் கைக்கும் கொண்டுபோகின்றன. அதனால் கால் தூக்கிக்கொள்ள அதில் தைத்த முள்ளைக் கை எடுக்கிறது. இச் செயல்களெல்லாம் மூடி விழிக்கும் நேரத்துள் மிக விரைவாக நிகழ்கின்றன. இவ்வாறே ஏனைய நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

நரம்புகளுக்குத் தலைமை இடமாகிற மூளை மூன்று பகுதிகளாக அமைந்திருக்கிறது. அப்பகுதிகள் க. 'பெரிய மூளை' உ. 'துணை மூளை' ங. 'மொட்டு' எனப் பெயர்பெறும். இவைகளுள் மொட்டு என்பது இம்மூன்றினுள் கீழ்ப்பகுதி. இதன்

உருவத்தைக்கொண்டு இது மொட்டு என்று பெயர் பெற்றிருக்கிறது. இதிலிருந்தே 'சடை' என்பது, முள்ளந்தண்டெனப் பெயர் பெறும் முதுகெலும்பிலுள்ள நடுப்புழை வழியாகத் தொடர்ந்து செல்லுகிறது. இந்த மொட்டிலிருந்து உயிர் நிலை (Heart) அசைவையும், உயிர்நிலையிலிருந்து கிளம்பும் செந்நீர் ஓட்டத்தையும், மூச்சுவிடுதலையும், வியர்த்தலையும், உணவறுதலையும் செய்கின்ற நரம்புகள் பிரிகின்றன. சடையிலிருந்து பிரிகிற நரம்புகள் கைகால் அசைவுகள் முதலிய உடலில் நடக்கவேண்டிய பொது வேலைகளுக்கு ஆணைகளைக் கொண்டுபோகின்றன. இச்சடை, மூளையின் வேலையாளைப்போல இருந்தாலும் மூளையின் தொடர்பே.

துணைமூளைதான் தசைகளை அடக்கியாளும் நரம்புகளுக்கு நடு இடம். தசைகளின் அசைவுகளுக்கு இதுவே ஆணை தருகின்றது. உடல் நேரே நிமிர்ந்து நிற்கும் தன்மை இதனாலேயே அமைகிறது. இத் துணைமூளை பருக்கப்பருக்கவே உடலுக்கு நேரே நிற்கும் ஆற்றல் உண்டாகிறது. நாய் முதலிய மாக்களுக்கு இது சிறிதாக இருத்தலினாலேயே அவைகளுக்கு இருகால்களில் நிற்றல் இயலவில்லை. யானைமிகப் பருத்த உருவத்தோடிருந்தாலும் அதன் துணைமூளை மிகச்சிறியது. இதனினும் சிறு உருவுடைய குதிரைக்குத் துணைமூளை சற்றுப் பெரிதாக இருக்கிறது. குதிரையினும் சிறு உருவுடைய வாலில்லாக் குரங்குக்கு இதைக் காட்டிலும் துணைமூளை பருத்திருக்கிறது. அதனாலேயே அது இரண்டு கால்களில் நிற்கவும் நடக்கவும் ஆற்றலுடையதாக இருக்கிறது. இந்தத் துணைமூளைதான் கைகால்களைத் தன் வழிப்படுத்துகிறது. இது மிகவும் பெரியதாயிருத்தலால்தான் மக்களுக்குச் சித்திர முதலிய அருமையான வேலைகளெல்லாம் செய்ய இயலுகிறது. தசைகளெல்லாம் சேர்ந்து செய்யவேண்டிய சித்திரமெழுதல், வீணைவாசித்தல் முதலிய அரிய செயல்களைச் செய்யச்செய்வது துணைமூளையின் வளர்ச்சியே.

மக்களைக்காட்டிலும் உடல்வலி மிக வுடைய மாக்களையெல்லாம் மக்கள் அடக்கியாளுதல் அறிவு வலிமையாலேயே.

உடல் வலியைக்காட்டிலும் மூளைவலியே சிறந்தது. மேலும் கைகளைப் பயன்படுத்தும் தன்மை மக்களுக்கு மாக்களிலும் அதிக ஆற்றலைத் தருகிறது.

அறிவு அதிகப்பட அதிகப்பட பெரிய மூளை பருக்கிறது. இம்மூளை இரண்டு பகுப்பாக உள்ளது. இவ்விரண்டையும் ஒன்று சேர்த்து ஒன்றுபோல் வேலைசெய்யத் துணைபுரியும் ஓர் வெள்ளையான பகுப்பு நடுவே அமைந்திருக்கிறது. மேலே இருந்து பார்த்தால் பெரியமூளை பலமடிப்புக்களால் அமைந்ததாகத் தெரிய வரும். இம்மடிப்புக்களுக்கு நடுவிலே பல பள்ளங்களிருக்கின்றன. மூளையின் மேற்பரப்பு விரிய விரிய அறிவும் வளருகிறது. மேற்பரப்பு வளரவளர இதிலுள்ள பள்ளங்கள் அதிக ஆழமாகின்றன. இதனால் மூளையை மூடிக்கொண்டிருக்கும் மண்டையோடும் விரிகின்றது. மண்டையோடு பருப்பதிலும் மூளை மிக விரைவில் பருப்பதாலேயே இம் மடிப்புக்கள் ஏற்படுகின்றன.

மூளை வளர வளர மேலே பலதட்டுக்கள் உண்டாகின்றன. இம்மேற்பாகம் தான் உண்மையான மூளை. இம்மூளையில் நரம்புகள் போகிற இடமெல்லாம் வெள்ளையாகவும், நரம்புகளுக்கு உயிர்நிலையான அணுக்கள் இருக்கும் இடமெல்லாம் மென்மையான மஞ்சள் நிறமாகவும் இருக்கின்றன. மூளையின் மேற்பகுதியிலே கணக்கில்லாத நரம்பு நடுவிடங்கள் இருக்கின்றன. வாய், கண், மூக்கு, செவி ஆகிய உறுப்புக்களெல்லாம் நரம்புகளால் இதனோடு சேர்க்கப்பெற்றிருக்கின்றன. இவைகளின் உணர்ச்சிக்கு இப்பெரிய மூளையே ஆணை தரவேண்டும். மூளையிலுள்ள மடிப்புக்களுக்கு நடுவிலுள்ள பள்ளங்களிலெல்லாம் நரம்புக்கொடிகள் ஓடுகின்றன. மடிப்புக்களெல்லாம் நடுவிடங்களே. இந்த நரம்புக்கொடிகள் ஒற்றுமைக்கொடிகள் என்று சொல்லப்படும். எடுத்துக்காட்டாக, ஒருவர் ஓர் இன்னிசைப் பண்பாடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அப்பண்ணை வேறொருவர் பாடியது நமது நினைவுக்கு வருகிறது. ஓர்படத்தை நாம் பார்க்குமிடத்து நாம் முன் பார்த்திருக்கும் அதைப்போன்றதோர் படம் நமது நினைவுக்கு வருகிறது. நாம் ஒருவனோடு

பழகி அவனை நமது நண்பனுக்கி அவனுடைய பேச்சை அடிக்கடி கேட்டிருக்கிறோமென்று வைத்துக்கொள்வோம். பின் அவனுடைய பேச்சைக் கேட்டமாத்திரத்தில், அவனது உருவத்தைக் காணுமுன்னரே, அது இன்னாருடைய பேச்செனநாம் அறிந்து கொள்கிறோம். அத்துடன் அவனுடைய உருவமும் நமது நினைவுக்கு வருகிறது. இவைகளெல்லாம் இவ்வொற்றுமைக் கொடிகளின் செயல்களே. இக்கொடிகள் பல நடுவிடங்களையும் சேர்த்து வைப்பதுடன் அவைகளின் செயல்களையும் ஒன்றோடொன்று அறியச்செய்கின்றன.

மூளையிலே மூன்றுவிதமான கொடிகளிருக்கின்றன. அவை க. உணர்ச்சிக்கொடிகள், உ. ஒற்றுமைக் கொடிகள், ந. கட்டளைக் கொடிகள் என்பன. மூளையிலிருந்து பன்னிரு இணை நரம்புகள் அறிவுக் கருவிகளுக்கு வருகின்றன. இவை ஒவ்வொரு உறுப்பிலிருந்தும் மூளைக்குப் போகும் உணர்ச்சி நரம்புகளும், மூளையிலிருந்து உறுப்புக்களுக்கு வருகிற ஆணை நரம்புகளுமாம். உளச்சான்றுக்கு இருப்பிடம் மூளையே. உடலிலுள்ள எனைய உறுப்புக்களின் செயல்களையெல்லாம் இது தலைமைபூண்டு மேற்பார்க்கிறது.

உ

பாண்டியர் வரலாறு.

திருவாளர் T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

(முற்றொடர்ச்சி—407.)

இரண்டாம் இராசசிம்மபாண்டியன் :—இவன் நெடுஞ்சடையன் பராந்தகனது புதல்வன். சின்னமனூர்ச் செப்பேடுகள் இவன் பெயரை மாத்திரம் கூறுகின்றனவேயன்றி இவனைப் பற்றிய செய்திகளுள் ஒன்றையும் உணர்த்தவில்லை. எனவே, இவன் ஆட்சிக்காலம் மிகச் சுருக்கமாயிருந்திருத்தல் வேண்டும். அன்றியும் இவன்காலத்தில் வரலாற்றில் குறித்துவைக்கத் தக்க நிகழ்ச்சிகள் நிகழவில்லை போலும். இவனது ஆட்சிக்காலம் கி. பி. 790க்கும் கி. பி. 800க்கும் இடைப்பட்டதாகும். இவன், மாறவர்மன் என்ற பட்டம் புனைந்து அரசாண்டவன்.

வரகுணமகாராசன்:—இவன் இரண்டாம் இராசசிம்ம பாண்டியனது மகன் ஆவன்; சடையவர்மன் என்ற பட்டம் புனைந்து கொண்டு கி. பி. 800 முதல் கி. பி. 836 வரையிற் பாண்டிநாட்டில் ஆட்சிபுரிந்தவன். இவனைக் 'கொற்றவர்கள் தொழுகழற் காற் கோவரகுணமகாராசன்' என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் புகழ்கின்றன. இதன் உண்மையை ஈண்டு ஆராய்ந்து காண்போம்.

வரகுணமகாராசனது 6-ஆம் ஆண்டுக்கல்வெட்டு சோழநாட்டிலுள்ள ஆடுதுறையிலும், 8-ஆம் ஆண்டுக்கல்வெட்டு கும்பகோணத்திலும், 10-ஆம் ஆண்டுக்கல்வெட்டு செந்தலையிலும், 13-ஆம் ஆண்டுக்கல்வெட்டு திருவெள்ளாறையிலும் இருத்தலால்

சோழமண்டலம் முழுவதும் இவ்வேந்தனது ஆட்சிக்குட்பட்டிருத்தல் வேண்டும். அன்றியும், கி. பி. 795 முதல் கி. பி. 830 வரையில் நெடுமுடி வேந்தனாகிய தந்திவர்மப்பல்லவனது கல்வெட்டுக்கள் சோழமண்டலத்தில் காணப்படவில்லை. எனவே, இப்பல்லவமன்னனது ஆட்சியின் பிற்பகுதியில் தான் நம் வரகுணமகாராசன் சோழமண்டலத்தின்மீது படையெடுத்து அதனைத்தன் ஆளுகைக்குள்ளாக்கியிருத்தல் வேண்டும்.

இனி, இவ்வேந்தனது பதினாறாம் ஆண்டுக்கல்வெட்டொன்று திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள அம்பாசமுத்திரத்தில் இருக்கின்றது. அதில், இம்மன்னன் தொண்டை மண்டலத்தில் பெண்ணையாற்றங்கரையிலுள்ள அரசூரில் வீற்றிருந்தபோது அச்சாசனம் அளிக்கப்பெற்றது என்று சொல்லப்பட்டுளது. எனவே, தொண்டை மண்டலத்தின் தென்பகுதியும் இவனது ஆளுகைக்குட்பட்டிருந்தது என்பது நன்கு வெளியாகின்றது. இவன் காலத்திருந்த பல்லவவேந்தனாகிய தந்திவர்மன் என்பான் சோழமண்டலத்தையும் தொண்டை மண்டலத்தின் தென் பகுதியையும் இழந்து, எஞ்சிய பகுதியையே ஆண்டுவந்தவனாதல் வேண்டும். ஆகவே, சோழ மண்டலத்தையும் தொண்டை மண்டலத்தையும் பாண்டி மண்டலத்தோடு சேர்த்து ஒருங்கே ஆட்சிபுரிந்த பெருமையுடையவன் நம் வரகுணமகாராசன் என்பது இனிது புலப்படுதல் காண்க.

இனி, இவ்வரசர் பெருமானது சிவபத்தியின் மாண்பு இத்தகையது என்று அளவிட்டுரைக்குந் தரத்ததன்று. முற்றத்துறந்த முனிவராகிய பட்டினத்தடிகள் தாம் இயற்றியுள்ள திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் இவனது சிவபத்தியின் பெருமையினை எடுத்துக்கூறிப் பெரிதும் பாராட்டியுள்ளார். அவ்வடிகளிற் கூறியுள்ளது—

"வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பன்னரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்தும்

குவளைப் புனலிற் றவளை யரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல வெம்மித் தலையுங்
கிடக்க வேண்டுமென் றடுத்தடுத் திரந்துங்
கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்துங்
காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்" என்பது.

கி. பி. பத்தாம் நூற்றண்டில் நம் தமிழகத்தில் வாழ்ந்தவரும் சைவத்திருமுறைகளைத் தொகுத்தவருமாகிய நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியார் தாம் பாடியுள்ள கோயிற்றிருப் பண்ணியர் விருத்தத்தில்

'பொடியேர் தருமே னியனுகிப் பூசல் புகவடிக்கே
கடிசேர் கணை குனிப் பக்கண்டு கோயிற் கருவியில்லா
ரடியே படவமை யுங்களை யென்ற வரகுணன்றன்
முடியே தருகழ லம்பலத் தாடிதன் மொய்கழலே' என்று

இவன் சிவபெருமான்பால் வைத்திருந்த பேரன்பினைப் புகழ்ந்து கூறியுள்ளார். இதனாலும் இவனது சிவபத்தியின் மாட்சியை நன்குணரலாம்.

சீமாறன் பரச்சக்கர கோலாகலன் :—வரகுண மகாராசன் சிவபெருமான் திருவடிநீழல் எய்திய பின்னர் அவனது புதல்வனாகிய இவ்வேந்தன் கி. பி. 836-ஆம் ஆண்டில் முடிசூட்டப்பெற்று ஆட்சிபுரியத் தொடங்கினான். இவனுக்கு 'ஏகவீரன்' 'சிவல்லபன்' என்ற புனைபெயர்களும் உண்டு. இவன் மாறவர்மன் என்ற பட்டம் பெற்றவன். இவன் சேரர், பல்லவர், சிங்களவர் முதலானவரோடு புரிந்த போர்கள் பலவாகும். இவன், குண்ணூர், சிங்களம், விழிஞம், குடமூக்கு ஆகிய இடங்களில் போர் நிகழ்த்தி, அங்கு வந்தெதிர்த்த கங்கர், பல்லவர், சோழர், காலிங்கர், மாகதர் முதலான அரசர்களைவென்று ஆற்றலொடு விளங்கினான் என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் கூறுகின்றன. இங்குக் குறித்துள்ள இடங்களுள் விழிஞம் என்பது திருவனந்தபுரத்திற்குத் தெற்கே பத்து மைல் தூரத்தில் மேலைக்கடற்கரையிலுள்ளதோர் துறைமுகப்பட்டினமாகும். (South Indian Inscriptions Vol III page 13) ஆகவே, விழிஞத்துப்போரில் இவ்வேந்தன் சேரரை வென்றிருத்தல்வேண்டும். இவனால் வென்றடக்கப்பெற்ற சேரமன்னன் யாவன் என்பது தற்காலத்திற் புலப்படவில்லை. குண்ணூரில் யாரோடு இவன் போர் புரிந்தனன் எனபதும் தெரியவில்லை. குடமூக்கு என்பது இந்நாளில் கும்பகோணம் என்று வழங்கும் நகரமாகும். கும்பகோணத்திலுள்ள கோயில்களிற் காணப்படும் கல்வெட்டுக்கள் இந்நகரைக் குடமூக்கு என்றே கூறுவதோடு சைவசமயாசாரியர்களது திருப்பாடல்களும் அங்ஙனமே உணர்த்துகின்றன. நம் மாறவர்மன் பரச்சக்கர கோலாகலன், தன் தந்தையாகிய வரகுணமகாராசனைத் தெள்ளாற்றுப் போரில்வென்ற நந்திவர்மனை இக்குடமூக்குப் போரில் கி. பி. 854-ஆம் ஆண்டில் புறங்காட்டியோடச் செய்து தன் பெருஞ்சினத்தை ஒருவாறு தணித்துக் கொண்டனன். எனவே, குடமூக்குப்போர் இம் மாறவர்மனுக்கும் பல்லவர்க்கும் நிகழ்ந்த பெரும் போரேயாகும். இச்செய்தி நிருபதுங்கவர்மன் என்ற பல்லவ அரசனது பாகூர்ச் செப்பேடுகளிலும் சொல்லப்பட்டுள்ளது. (South Indian Inscriptions Vol II part V).

ஈழநாட்டில் இரண்டாவது சேனன் ஆட்சிபுரிந்துகொண்டிருக்கும் நாளில் நம் மாறவர்மன் அந்நாட்டின்மீது படையெடுத்துச்சென்று பல நகரங்களைக் கொள்ளையிட்டுப் புத்தவிகாரங்களிலுள்ள பொற் படிமங்களையும் விலையுயர்ந்த பிறபொருள்களையும் கவர்ந்து சென்றனன் என்றும் அதனால் சிங்களதேயம் தன் செல்வமெல்லாம் இழந்து சிறுமையுற்றதென்றும் மகாவம்சம் என்னும் இலங்கைவரலாறு கூறுகின்றது. இதனால் மாறவர்மன் சிங்களத்தைவென்றான் என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் உணர்த்துவது உண்மையாதல் காண்க.

இவன் இங்ஙனம் தன் புகழையும் வெற்றியையும் யாண்டும் பரப்பிவாழ்ந்துவரும் நாளில் இவனது தாயத்தினனாகிய மாய பாண்டியன் என்பான் இவனுடன் பகைத்து இலங்கைவேந்தனாகிய இரண்டாம் சேனனுடன் நட்புரிமை பூண்டு ஒழுகிவந்தனன். இவ்விருவரும் மாறவர்மனை எதிர்க்கும் ஆற்றலின்றிப் பாண்டியர்குடிக்கு வழிவழிப்பகைமைபூண்டு அன்னோரைவென்று அழித்தற்குக் காலங்கருதிக்கொண்டிருந்த பல்லவ அரசர்களுள் ஒருவனாகிய நிருபதுங்கவர்மனது உதவியை நாடினர். அவ்வேந்தனும் தன் கருத்தை நிறைவேற்றுவதற்கு அதுவே தக்க காலமெனக்கருதிப் பாண்டிநாட்டின்மீது படையெடுத்தற்குத்தானும் அன்னோர்க்கு உதவிபுரிவதாக உறுதி கூறினன். இங்ஙனம் பல்லவர்களும் சிங்களவர்களும் ஒருங்குசேர்ந்து பெரும்படையைத் திரட்டிக்கொண்டு கி. பி 862-ஆம் ஆண்டில் பாண்டி நாட்டின் மீது சென்றனர். இதனையுணர்ந்த மாறவர்மன் பகைஞரைத் தன் நாட்டிற் புகாதவாறு இடையில் தடுத்துப்பெரும் போர்புரிந்தனன். அரிசிலாற்றங்கரையில் நிகழ்ந்தபோரில் பல்லவ மன்னனாகிய நிருபதுங்கனும் சிங்களவர்களும் வெற்றியெய்தவே, மாறவர்மன் தோல்வியுற்றனன். இப்போர் நிகழ்ச்சி, நிருபதுங்கவர்மனது பாகூர்ச் செப்பேடுகளிலும் கூறப்பட்டுளது. இப்பல்லவ வேந்தனது கல்வெட்டுக்கள் சோழமண்டலத்திலுள்ள கண்டியூர், கோவிலடி, லால்குடி முதலான ஊர்களில் இதுமுதல் காணப்படுதலால் இவன் பாண்டியர்களிடமிருந்து சோழமண்ட

லத்தைத் திரும்பக்கைப்பற்றிக் கொண்டனன் என்பது இனிது புலப்படுகின்றது. பல்லவர்களோடும் சிங்களவர்களோடும் நிகழ்த்திய இப்போரில் மாறவர்மன் ஒரு யானைமீதேறிப் போர்க்களத்தினின்று ஓடி வேறிடத்தில் உயிர்துறந்தனன் என்றும், அவனது மனைவியும் உடனே உயிர்துறந்தனள் என்றும் மகாவம்சம் கூறுகின்றது. அன்றியும் கி. பி. 862 ஆம் ஆண்டில் இவனது முதல் மகனாகிய வரகுணவர்மன் பாண்டிநாட்டில் பட்டம் எய்தியுள்ளமையின், இவனது தந்தையாகிய மாறவர்மன் அவ்வாண்டில் இறந்திருத்தல் வேண்டும். நம் மாறவர்மனுக்கு வரகுணவர்மன், பராந்தகன் என்ற இருமக்கள் இருந்தனர்.

வரகுண வர்மன்:—மாறவர்மனது முதல் மகனாகிய இவ்வேந்தன் கி. பி. 862-ஆம் ஆண்டில் முடிசூட்டப் பெற்றான் என்று மதுரை சில்லாவில் ஐவர்மலையிலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. இவன் சடையவர்மன் என்னும் பட்டத்துடன் அரசாண்ட வேந்தன் ஆவன். இவனைக் 'குரைகழற்காலரைசிறைஞ்சக் குவலயதலந் தனதாக்கின—வரைபுரையு மணிநெடுந்தோள் மன்னர்கோன் வரகுணவர்மன்' என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் புகழ்ந்து கூறுகின்றன. பாண்டியர்கட்கும் பல்லவர்கட்கும் நடைபெற்றுவந்த போர் இவன் காலத்தேதான் ஒருவாறு முடிவெய்தியது என்பது இனிது புலனாகின்றது. இதன் உண்மையை ஈண்டு ஆராய்வாம்.

பழைய சோழமன்னர்களின் வழியினனும் விசயாலயனது மகனுமாகிய முதலாம் ஆதித்த சோழன் என்பான் நம் வரகுணவர்மனுக்கு நெருங்கிய உறவினாற் பிணிக்கப்பெற்று உற்ற நண்பனாயிருந்தான். இவ்விருவருக்கும் சேரமான் தாணுரவி என்பான் சிறந்த நண்பனாகவும் உறவினனாகவும் இருந்தனன். எனவே, சேரசோழ பாண்டியர்களாகிய இம் மூவேந்தரும் தம்முள் உட்பகை சிறிதுமின்றிப் பெரு நட்புடையவர்களாய் ஒழுகி வந்தனர். இம்மூவரும் பல்லவர்கள் கைப்பற்றி யாண்டுவந்த சோழ மண்டலத்தைத் திரும்பத்தாம் கைப்பற்ற எண்ணித்தக்ககாலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். கும்பகோணத்திற்கு வட

மேற்கே ஐந்து மைல் தூரத்தில் மண்ணியாற்றங்கரையிலுள்ள திருப்புறம்பியம் என்னுமிடத்தில் தமிழ் மூவேந்தர்கட்கும் பல்லவர்கட்கும் கி. பி. 880-ஆம் ஆண்டிற்கணித்தாக ஒரு பெரும் போர் நடைபெற்றது. இப்போரில் பல்லவர்கட்குத் துணையாக வந்திருந்த கங்க அரசனாகிய முதலாம் பிருதிவிபதி என்பான் பாண்டியன் வரகுணவர்மனால் கொல்லப்பட்டான்*; பல்லவ வேந்தனாகிய அபராஜிதவர்மன் தோல்வியுற்றுத் தொண்டை மண்டலத்திற்கு ஓடிவிட்டான். பின்னர் முதலாம் ஆதித்த சோழன் தஞ்சைமாநகரில் முடிசூட்டப்பெற்றுச் சோழமண்டலம் முழுவதையும் ஆட்சிபுரியும் பெருமையை எய்தினான். (South Indian Inscription Vol III No. 205) இப்போரில் தமிழ் மூவேந்தர் பக்கத்திருந்து பேராற்றலோடு போர்புரிந்த பெருவீரனாகிய விக்கி அண்ணன் என்பவனுக்குச் 'செம்பியன் தமிழவேள்' என்ற பட்டமும், தவிசும், சாமரையும், சிவிகையும், திமிலையும், கோயிலும், போனகமும், காளமும், களிற்று நிரையும் முதலாம் ஆதித்த சோழனாலும் சேரமான் தாணுரவியாலும் அளிக்கப்பட்டன.† பல்லவர்களது ஆட்சி ஒழிதற்கும் சோழர்களது ஆட்சி மீண்டும் சோழமண்டலத்தில் நிலைபெறுதற்கும் காரணமாயிருந்த இத்திருப்புறம்பியப்போர், தமிழக வரலாற்றில் குறித்தற்குரிய ஒரு பெரிய நிகழ்ச்சியாகும். இப்போரில் இறந்த முதலாம் பிருதிவிபதியின் கோயில் ஒன்றும் உதிரம் படிந்த தோப்பு ஒன்றும் திருப்புறம்பியத்தில் இன்றும் உள்ளன. இவை முற்காலத்தில் அங்கு நிகழ்ந்த பெரும்போரை உணர்த்துதற்குரிய அடையாளங்களாகும்.

நம் வரகுணவர்மன் காலத்தில் நிகழ்ந்த பிறசெய்திகளுள் ஒன்றும் தற்காலத்திற் புலப்படவில்லை; அன்றியும், இவன் எத்துணை ஆண்டுகள் பாண்டிநாட்டில் ஆட்சிபுரிந்தனன் என்பதும் இதுபோது அறியக்கூடவில்லை; இவனுக்குப் பின்னர் இவனது இளவலாகிய பராந்தக பாண்டியன் பட்டத்திற்கு வந்தனன் என்பது மாத்திரம் தெரிகிறது.‡

* South Indian Inscriptions Vol. II No. 76. † Vol. III No. 89.

‡ சின்னமனூர்ச் செப்பேடுகள். (Annual Report on South Indian Epigraphy for 1907).

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

பராந்தக பாண்டியன் :—இவன் மாறவர்மன் பரசக்கர கோலாகலனது இரண்டாம் புதல்வன் ஆவன். இவனது தமையனாகிய வரகுணவர்மன் இறந்த பின்னர், இவன் அரியணையேறினான். இவன் அரியணையேறியது கி. பி 880-ஆம் ஆண்டிற்குப் பின்னர் நிகழ்ந்திருத்தல்வேண்டும். ஆனால் அவ்வாண்டை இதுபோது அறிந்து கூறுதற்கியலவில்லை. இவன், தன் தமையனைப் போல் சடையவர்மன் என்ற பட்டமுடையவனாய் வாழ்ந்து வந்தனன். இவன் சோழமண்டலத்திலுள்ள இடவை என்னும் நகர் மீது படையெடுத்துச் சென்றனன் என்று திண்டுக்கல் தாலூகாவிலுள்ள இராமநாதபுரக் கல்வெட்டு ஒன்று உணர்துகின்றது. இடவை என்பது சோழமண்டலத்தில் இராசேந்திரசிங்க வளநாட்டில் மண்ணிநாட்டில் உள்ளது என்று தஞ்சாவூரிலுள்ள இராசராசேச்சுரக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கும்பகோணத்திற்கு அண்மையிலுள்ள திருவிசலூர், வேப்பத்தூர் முதலான ஊர்கள் இம்மண்ணிநாட்டில் உள்ளனவேயாகும். எனவே, இவற்றிற்கருகில் தான் இடவையும் இருத்தல்வேண்டும். இந்த இடவை நகரின்மீது பராந்தக பாண்டியன் படையெடுத்துச் சென்றமைக்குக் காரணம் புலப்படவில்லை.

இவ்வேந்தன் கொங்கர்களைப் போரில் வென்றும், பெண்ணுகட நகரையழித்தும் பல தேவதானங்களும் பிரமதேயங்களும் விட்டும் புகழ்பெற்றனன் என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் உணர்த்துகின்றன. இவனுக்கு வீரநாராயணன் என்ற ஒரு பெயரும் உண்டு. இவனது பட்டத்தரசி வானவன்மாதேவி என்பாள். இவ்விருவருக்கும் பிறந்த புதல்வன் மூன்றும் இராசசிம்ம பாண்டியன் ஆவன். நம் பராந்தக பாண்டின் கி பி. 900-க்கு அணித்தாக இறந்தனன் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவனைப்பற்றிய பிற செய்திகள் தற்காலத்தில் புலப்படவில்லை. (தொடரும்.)

அடம்பும் கடம்பும்.

திருவாளர், ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், மன்னார்குடி.

பத்துப்பாட்டு எட்டுத்தொகை முதலிய பண்டைச் சங்க நூல்களிலே நன்கு பயின்றவர்கள் அந்நூல்களிலே 'அடம்பு' 'கடம்பு' என்னும் சொற்கள் பயின்று வழங்குதலை அறிந்திருப்பர். ஆயினும் 'அடம்பு' என்பது இன்னது கடம்பு என்பது இன்னது என்று பார்த்தறிந்தவர் ஒரு சிலரே யாவர். பண்டைச் சங்க நூல்களை ஊன்றிப் பார்ப்போமானால், அக்காலத்துப் புலவர்கள், விலங்கு பறவை மரம் மலர் முதலிய பொருள்களைப் புனைந்துரைக்கும்போது, அவற்றின் இயல்புகளை மிக நுட்பமாக ஆராய்ந்து எடுத்துக்காட்டியும், தெரியாத பொருள்களுக்கு உவமைகாட்டி விளக்கியும், தெரியாதவர்களும் அப்பொருள்களைக் கண்ணெதிரில் கண்டாற்போல இன்பமுறும்படிச் செய்யும் ஆற்றல் படைத்திருந்தார்களென்பது நாம் தெரிந்துகொள்ளலாம். பிற்காலத்து நூல்களிலே அவ்வாற்றல் அவ்வளவாகக் காணப்படவில்லை. இதற்குக் காரணம் வடமொழிக் கலப்பு மிகுதியினாலும் ஆங்கில மொழிப்பயிற்சி மிகுதியினாலும் புதிது புதிதான அலங்காரச் சுவையிலும் வெவ்வேறு பொருட்சுவையிலும் மனம் திரும்பியதேயாம். மதக்கோட்பாடுகளிலே மனம் திரும்பிச் சங்கவிலக்கியங்களை இகழ்ச்சிசெய்ததும் ஓர் காரணம். பத்துப்பாட்டு எட்டுத்தொகை சிந்தாமணி முதலிய சங்கநூல்களை இலக்கணக்கொத்து முகவுரையில் சாமிநாததேசிகரும் இகழ்ந்துரைத்தாரெனின், அவர் சங்கநூற் பகுதிகளை அவர் உரையிலே பலவிடத்தும் எடுத்துக் காட்டுதலின், அவர்க்கது கருத்தன்று; புறமதப் படுகுழியில் வீழாமல் காப்பதே கருத்தெனத் தெளிக. அவருடைய மாணாக்கர் சங்கரநமச்சிவாயப்புலவர் மிகுதியாகச்சங்கநூற் பகுதிகளையே

உதாரணமாகக் காட்டினர். தெய்வப்புலமைச் சிவஞானமுனிவர், கச்சியப்பமுனிவர், மீனட்சிசுந்தரம் பிள்ளை முதலியோர் சங்கநூல்களைக் கரைகண்டவர்கள் என்பது அவர்கள் இயற்றிய நூல்களால் அறியப்படுகின்றது. ஆளுடைய பிள்ளையார், அரசர், நம்பியார், அடிகள், மற்றை ஆழ்வார் முதலியோரும் சங்கநூல் வழக்கைத் தழுவியே பாமாலை புனைந்தனர். சங்க நூல்களை இகழ்ந்தவர்களுக்கு மதக்கோட்பாடுகளை உள்ளவாறு உணர்ந்து கொள்வது முடியாது. இக்கருத்துக்கொண்டே ஆசிரியர் சிவஞானமுனிவர் தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறவளி முதலியவற்றால் இலக்கணத்துக்கும் தருக்கத்திற்கும் வரம்புகண்டுகொண்டு திராவிடமாபாடியம் செய்யப்புகுந்தார் என்றறிக.

தமிழ்நாட்டில் பிறந்து தமிழிலே வளர்ந்த மக்களுள்ளும் சிலர், பிறமொழிக்கள்ளுண்டு மயங்கி, அம்மொழி நூல்களிலே காணப்படுவது போல அறிவு வளர்ச்சிக்குரிய புதுமுறைகள் தமிழ் நூல்களிலே காணப்படுவதில்லை யென்று பிதற்றுவர். இவர், கண் தெரியாதவர் ஒளியென்று ஒருபொருளே இல்லையென்று நாட்டத்துணிவாரை ஒப்பர். விண்ணிலே செல்லும் திங்கள் உலகையும் நாடிப்பார்த்தோம் என்பார். மண்ணிலே, தமது கண்ணிலே படநின்ற பொருள் இதுவென்று உணர்ந்து கொள்ளமுடியாதவர் உலகங்களில் உள்ள பொருள்களையெல்லாம் கண்டறிந்தோம் என்பது நகையாடுதற்குரியதென்றொழிக.

இனி 'அடம்பு' என்னும் சொற்பொருளை ஆராய்வாம். எட்டுத்தொகை நூல்களில் ஒன்ருகிய குறுந்தொகையிலே,

'மானடி யன்ன கவட்டிலை அடம்பின்
தார்மணி யன்ன ஒண்பூக் கொழுதி
ஒண்டொடி மகளிர் வண்டல் அயரும்
புள்ளிமிழ் பெருங்கடற் சேர்ப்பனை
உள்ளேன் தோழி படீஇயர்என் கண்ணே'

என்னும் செய்யுள், தலைமகன் பிரிவுபற்றி வருந்திய தலைமகள் தோழிக்குச் சொன்னதாக வருவது. இதிலே நெய்தல் நிலத்து

வழக்குப் புனைந்துரைக்கப் பட்டிருக்கிறது. (நெய்தல் நிலம்—கடலை அடுத்தநிலம்) அங்கே உள்ள ஊர்களுக்குப் பட்டினம் என்றும் பாக்கம் என்றும் பெயர். அவ்விடத்திலே உள்ள சிறு பெண்கள் 'வண்டற்பாவை' யென்று ஒரு பாவையைப் பண்ணி விளையாடுவது வழக்கம். வண்டல் மண்ணாலே பண்ணப்படுதல் பற்றி வண்டற்பாவை யெனப்பட்டது.* வண்டல் மண்ணுக்கு ஈடாக அந்த நிலத்தில் மிகுதியாக விளையும் முத்துக்களைக் கொண்டும் அப்பாவைபண்ணி விளையாடுவர் அந்நாட்டுச் செல்வமகளிர்.† சங்கின் முத்துக்கள் அங்கே மிகுதி. மருதநிலத்திலிருந்து கொண்டுவந்த பாக்குக்களை நெய்தல் நிலத்து மகளிர் உரலில் பெய்து இடித்துத் தூளாக்கி முறத்தில் கொழிக்கும்போது சிதறின முத்துக்களை யெடுத்துச் சிறுவீடுகட்டி விளையாடுவர் என்று கல்வியிற் பெரியாரும் கூறினர்.‡ அவர் அந்தப்பாவைக்கு அந்நிலத்துக்குரிய அடம்பு, புன்னை, ஞாழல் முதலிய மலர்களைப் புனைந்து தாமும் புனைந்துகொள்வர். அந்த வழக்கு அந்தக் குறுந்தொகைச் செய்யுளிலே புனைந்துரைக்கப் பட்டுள்ளது. ஆயினும் அந்த 'அடம்பு' என்பது மரமோ செடியோ கொடியோ இன்னதென்று அதிலே விதந்து கூறப்படவில்லை. இதனால் குறுந்தொகைநூலை ஆராய்ச்சிசெய்த என் நண்பர் ஒருவருக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னே ஐயப்பாடு உண்டாகவே, அவர் அதுபற்றி என்னை உசாவினர். அவர் மருதநிலத்திலே உள்ளவர்.

---

* 'சிறுவீ ஞாழல் தேன்றோய் ஒள்ளிணர்
நேரிழை மகளிர் வார்மணல் இழைத்த
வண்டற் பாவை' (நற்றிணை—191).

'கழிப்பூக் குற்றும் கானல் அல்கியும்
வண்டற் பாவை வரிமணல் அகழ்ந்தும்' அகம்—329.

† 'தென்பால்—வன்பாற் றிரண் முத்த வண்டலின்மேல்'
(தஞ்சைவாணன்—48.)

‡ 'குற்ற பாகு கொழிப்பவர் கோணெறி
கற்றி லாத கருங்கண் நுளைச்சியர்
முற்றி லார முகந்துதம் முன்றிலில்
சிற்றில் கோலிச் சிதறிய முத்தமே.' (கம்ப-நாட்டுப்படலம்.)

அவர் கண்டறிந்தது அங்கிலத்தில் 'அடம்பு' எனப் பெயர் வழங்கப்பெற்றதொரு மாமே. மேற்குறித்த குறுந்தொகைச் செய்யுளிலே கண்ட அடம்பு இன்னதென வீதந்து கூறுவிட்டா லும், அதன் இலை இப்படியிருக்கும், பூ இப்படியிருக்கும் என்று அவைகளுக்கு உவமானம் எடுத்துக்காட்டி விளக்கப்பட்டது. அதன் இலை மானடியைப் போல இருகவடுபட்டிருக்கும் என்றும், பூ குதிரையின் கழுத்தில் கட்டப்படுகிற மணியைப்போல் இருக் கும் என்றும் புனைந்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாத்திலே அவர்கண்ட இலையும் பூவும் அப்படியில்லை. அதனால் அவர்க்கு ஐயம் உண்டாயிற்று.

யானும் மருதவைப்பில் உள்ளேன் ஆதலின், எனக்கும் அது இன்னதென்று அப்போது விளங்கவில்லை. ஆயினும் 'மாக்கொடி யடும்பின் மாயிதழ் அலரி' (நற்றிணை. 143). 'வண்டல்தைஇயு, வருதிரை உதைத்தும், குன்றோங்கு வெண்மணற் கொடியடும்பு கொய்தும்' (ஷை—254) ஆய் கொடிப்பாசடும்பு' (அகம்–329) என்று வருவனவற்றுள்ளே, 'அடும்பு' என்பதோர் கொடியுண் மை அறியப்படுதலால், அதன் திரிசொல்லாக 'அடம்பு' என வழங்கலாயிற்று எனக் கருதினேன் ஆயினும், அது இன்ன தென்று தெரிந்து காட்டுவாரைக் காணேன். நெடுநாள் சென்ற பின் யான் நெய்தனிலத்திலே உறையும்போது அங்குள்ள கல்லா மகன் ஒருவன், அடம்பங்கொடி இதுதான் என்று காட்டக் கண்டு, வியப்பும் நாணமும் மீதூரப்பெற்றேன். ஏனெனில், அந்தக்கொடி என் வீட்டுக்கு எதிரிலே நெடுநாளாகப் படர்ந்திருந் ததை நான் முன்னமே பார்த்துள்ளேன். புகைவண்டிசெல்லும் வழிகளிலே மழையினால் கரைகள் கரைந்துபோகாதபடி படா விட்டிருக்கிறதும் இந்தக் கொடிதான். பாண்டவர்களுக்குக் காந் துறைவாழ்க்கை நேர்ந்து பெயர் மாறுபட்டாற்போல, இந்த அட ம்பு என்னும் அருமையான கொடிக்கும் கரந்துறை வாழ்க்கை நேர்ந்து, பெயரும் மாறிக் குதிரைக் குளம்படியிலைக் கொடி எனும் பெயர் எய்திற்று. அம்மட்டோடும் நிற்கவில்லை. ஆங்கில மொழியிலும் 'Horse-hoof creaper' என்று மொழி பெயர்த்து வழங்கப்பட்டது. 'என்னே விதியின் வலியிருந்த

வாறு? 'முல்லையைக் குறிஞ்சியாக்கி மருதத்தை முல்லையாக்கிப், புல்லிய நெய்தல் தன்னைப் பொருவரு மருதமாக்கி, எல்லையில் பொருள்க ளெல்லாம் இடைதடுமாறு நீரால், செல்லுறு கதியிற் செல்லும் வினையெனச் சென்ற தன்றே' என்று கம்பர் ஆற்றுப் படலத்தில் கூறியபடி வினையின் வலி எதைத்தான் செய்யாது? அது கிடக்க, இவ்வரலாறு என் நண்பர்க்கு உணர்த்தப்படவே, அவர் அடம்பின் நிலைமைக்கும் தமிழ்மொழியின் நிலைமைக்கும் ஏங்கினர்.

இந்த அடம்பை நீங்கள் இப்போது உற்றுப்பார்க்கலாம். கடற்கரையிலும், புகைவண்டி வழிகளிலும் சேணுறப் படர்ந் திருப்பதை மழைக்காலத்திலே பார்த்தால் மிக அழகாக இருக்கும் இலைகள் மானடியைப் போலவே இரு கவடுபட இருக்கும். இந்த இலையைப்போலக் கவடுபட்ட இலையுள்ளது ஆத்தி. 'கவையிலை ஆரின் அங்குழை கறிக்கும்.' (அகம் 104) 'இளவரிக்கவட்டிலை ஆரொடு.' (கம்பர்—முதற்போர்-115.) இது வடிவுபற்றிய உவமை. இதன் மலர் தார்மணியை ஒத்திருக்கும்—இது வடிவும் நிறமும் பற்றிய உவமை. இதன் வடிவுக்கும் நிறத்துக்கும் தஞ் சைவாணன் கோவையில் பொய்யாமொழிப் புலவர் மிகவும் அருமையானதோர் உவமை கூறினர். அது பாராட்டத்தக்கது.

'மணிப்பா லிகைமுத்தம் வைத்தாங்கு அடம்பலர் வார்திரைதூய்
அணிப்பாய் துவலை யரும்பும் துறைவர்க்கு' என்பதிலே

அலையினால் தூவப்பட்ட நீர்த்துளிகள் அடம்ப மலர்களிலே வீழ்ந்து மாணிக்க வள்ளங்களிலே முத்துக்களை இட்டு வைத்தாற் போல் இருந்தனவென்றார்—இது 'அடும்பெலாம்—பாலிகை பூக்கும் பயின்று' (திணைமாலை 150—51) என்பதை மேற்கோளாக வுடையது. நெடிதாகப் படர்ந்திருக்கும் இடத்திலே பார்த்தால் பெரிய செந்தாமரைக் குளம்போலத்தோன்றும். சிலப்பதிகாரத் திலே 'தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்றேரும்
எம்மை நினையாது விட்டாரேல் விட்டகல்க
அம்மென் இணர அடம்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்'

எனக் கானல்வரியில் நல்லிசைப்புலவர் இளங்கோவடிகளால் புனைந்துரைக்கப்பட்டதுகொண்டு, இவ்வடம்பு எவ்வளவு அருமை யானதென்று தெரிந்துகொள்க. அகம் செய்யுள் 160ல் அடும்பு என்னும் கொடியின்பக்கத்திலே ஆமை முட்டையைப் புதைத்து வைத்து அது பார்ப்பாகும் வரையில் ஆண் ஆமை காத்துக் கொண்டிருக்கும் என்று புனைந்துரைக்கப் பட்டிருப்பதும் இதன் அருமையை விளக்கும்.

இனி, முற்கூறியவாறு மாணிக்க வள்ளம் போன்ற செம் மலர்களேயன்றி வெள்ளி வள்ளம் போன்ற வெண்மலர்கள் மலர்தலுற்ற அடம்பங்கொடியும் உண்டு. ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம் செய்—100-ல், 'வம்புநீ டலங்கல் மார்பின் வன்றொண்டர் வன்னிக்கொன்றை, 'தும்பை வெள்ளடம்பு திங்கள் தூயநீ றணிந்த சென்னித், தம்பிரான் அமர்ந்த தானம்' என்புழி வெள்ளடம்பு எனக்கண்டதும் இதுவே போலும். நுதல் விழி நாட்டத்திறையோன் தாள் வழிபாட்டிற் சிறந்தோர் பலரை இவ்வெள்ளடம்பு யாதென்று வினவினேன் ஆயினும் ஒருவரும் அது இதுதான் என்று தெரிவித்தாரிலர். திருநாவுக்கரையர் திருக்காட்டுப்பள்ளிக் குறுந்தொகையிலே, 'அடும்பும் கொன்றை யும் வன்னியும் மத்தமும்' என்புழிக்கண்ட 'அடும்பு' என்பதும் இதுவே போலும்.

இனிக் கடம்பு என்பஃதைப்பற்றி ஆராய்வாம்.

மதுரைக் காஞ்சியாராய்ச்சி.

திருவாளர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்,
ஆசிரியர், ஔவைத் தமிழகம், காரை.

(முற்றொடர்ச்சி பக்கம் 431.)

வாணிபநலன்:—

இதுகாறும், மதுரைக்காஞ்சியின் கருப்பொருளும், மதுரை யாண்ட மன்னரது ஆட்சி நலனும், மதுரையின் வளத்து ஒருபகுதியும் கூறப்பட்டன. இனி மதுரையின் வாணிப நலன், விழவு நலன் ஆகிய ஏனைநலன்களையும், கூறி, இக்காஞ்சியின் சொற்பொருணலங்களைப் பிறநூல்களோடு ஒப்பு நோக்குமிடத்துத் தோன்றும் சில நுண் பொருள்களும், அவ்வாராய்ச்சி யிடைப் போதரும் அக்கால ஒழுக்க நலன்களையும் கூறி இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

வடித்த சொற்களாற்றொடுக்கப்பெற்று, ஆயுந்தோறும் புத்தின்பம் பயக்கும் பொலிவு கூர்ந்து, கடவுளின்பத்தைக் கற்பார்க் கூட்டும் இன்ப நிலையமாய இப்பாட்டின்கண்வரும் வணிகர் பல திறப்படுகின்றனர். ஒரு சிலர் பண்டம் பகருநர் ஆவர். இவர்கள் மலை, நிலம், நீர் முதலிய விடங்களிற் படுவனவும், பிறவிடங்களிற் சிறுபான்மை கிடைக்கப்பெறுவனவுமாய பண்டங்களோடு பலவாய் வேறுபட்டு அழகு சிறக்கும் மணி, முத்து, பொன் முதலியவற்றிற்குத் தாம்பிறதேயங்களினின்றுவந்துள்ள அரும்பண்டங்களை மாறி வழங்குவர். இவர்கள் கொள்வதூஉம் மிகைபடாது; கொடுப்பதூஉம் குறைபடாது. மேலும், இவர்கள், தமக்கு ஓதிய இல்லறநெறியிற் றவறுது நின்று, அறத்தாறு போற்றி ஆருயிர்ப்பேணும் இயல்பினராவர். இவர் தம்இல்லங்கள்,

திரண்ட குன்றங்கள்பல மிக அண்மையவாய் நிற்ப அவற்றைக் காண்பார்க்குப் புலனாகும் சீரிய தோற்றத்தையும், விண்ணிடைப் பறந்து திரியும் பருந்துகள் இருந்து இளைப்பாறிப் பின்னர் உயரப் பறக்கும் உயர்ச்சியையும், பலவேறு சிற்பத்தொழில் விளங்கும் மாண்பையும் உடைய நல்ல இல்லங்களாகும். இவற்றுள் பல் வகைப் பண்டமொடு உணவும் மிக்குற்றுப் பொலியும்.

நிற்க, கோடுபோழ் கடைநர் முதல் கம்மியர் ஈறுகவுள்ள வணிகர் பலர் உளர். அவர்களுட்கோடுபோழ்கடைநர் சங்கு களையறுத்து வளை முதலியனவாகச்செய்து விற்பர்; திருமணி குயிற்றுனர் என்பவர் அழகிய மணிகளை வாங்கித்துளையிட்டு மாலை முதலியனவாகத் தொடுத்துவிற்பர்; இழைபுனைநர் பொன்னைக் காய்ச்சித் தூய்மைசெய்து ஒள்ளிய பூணாரங்கள் செய்வர்; இவர் கள் தட்டார் என்றும் வழங்கப்படுவர்; பொன் வாணிகர் வரப் பெறும் பொற்றிரளை உரையிட்டு நோக்கி மாற்றுக் காண்பவராவர்; கலிங்கம் பகர்நர் உயரிய பட்டாடைகளும் புடவைகளும் விற்பர்; செம்பு நிறைகொண்மார் என்பார் செம்பினை நிறுத்து விலைக்கு வாங்கும் வணிகராவார்; வம்பு நிறை முடிநர் கச்சுக்களை யழகு பெற முடியிட்டுத் தம்தொழில் நயம்தோன்றப் புனைந்துவிற்கும் வணிகர். எனைப்பூவாணிகர் நறியபூக்களும் புகைகமழும் சாந்தும் ஆய்ந்து தொடுத்து விற்றல் செய்வர்; சித்திரகாரிகள் என்பார் மகளிராவர்; இவர் கூரிய மதிநுட்பமுடையவர்; எழுதப்பெறும் வடிவங்களின் தொழில்கள் நன்கு விளங்கும் வகையில், இவர் தம் கூரிய வுணர்வுமுற்றும் பொருந்த எழுதிய ஓவியங்களை, ஒன் றோடொன்று ஒப்பக் காட்ட, அவ்வளவிற் காண்பார் கட்புல னெல்லாங் கவர்ந்து நிற்கும் தொழிற்பேறு சிறக்கும் சிறப்பினர். இவர்கட்கு ஓவியங்கள் எழுதிவிற்றலே தொழில். கம்மியர் எனப் படுவோர் அந்திக்கடையில் புடவைவிற்பவர். பெரியரும் சிறி யருமாகத் திரண்டு, நால்வகைத் தெருக்களிலும், மக்கள், ஒருவர் காலொடு ஒருவர் காலுற நெருங்கி நிற்ப, தெண்ணீர்த்திரையால் மடிப்புப்பெறும் யாற்றறல் ஒப்ப, பெரியவும் சிறியவுமாய பல மடிப்புடைவைகளை விரித்துவைத்துப் பிறர்க்கு விற்பர்.

சோற்றருநர் :—இவர்கள் வருவார்க்குச் சோறிடுதற்கெனத் தனிப்படச் சோறிடுசாலைகளமைத்து, அங்குப் பாற்சோறும் பாலும் கொணர்ந் தளிப்பர். வருபவர் தமித்துவரினும், கூட்டமாய் வரினும் சோறிடுதலில் வரைவின்றி யளிப்பர். அங்கு அச் சோற்றொடு தேன், பலவின்சுளை, மாங்கனி, பாகற்காய், வாழைக் காய், வழுதுணங்காய் முதலியனவும், வாழைப்பழம், முந்திரி கைப்பழம் முதலிய பழவகைகளும், இலைக்கறிகள் (கீரைவகை), கற்கண்டு, கிழங்கு முதலியனவும் செறிந்து கிடக்கும். இவற் றொடுகலந்து மணக்கும் ஊனும்பிறவும் உரைப்பார் உரையினையும் பாடுவார் பாட்டினையும் இகந்து திகழும்.

செல்வர்கள் :—இவர்கள் செக்கர் வானத்தை யொப்பச் சிவந்து நுணங்கும் ஒள்ளிய ஆடையுடுத்து, அரையிற் பொன் புனைந்த உடைவாளைப் பொலிவுபெறக்கட்டி, தோளில் மேலாடை கிடந்தசைய, பிறக்கிடாப் பெருமையுற்ற தம் திருந்தடியிற் கச்சம் தின்ற கழலிருந்து ஒலிப்ப, வேப்பந்தெரியலும், செங்கழுநீர் மாலையும் அணிகிளரும் மார்பிற்றிகழும் ஆரத்தோடு கலந்து விளங்க, காற்றினுங் கடிய கதழ்பரி பூட்டிய திண்ணிய தேர்மீ திவர்ந்து, நாற்புறமும் காலோர் (காலாட்கள்) காவல் செய்ய விரைந்து செல்லும் மேம்பாடுடையவர். வருவார்க்கு வரையாது கொடுக்கும் வானம்போலும் வண்மையினராகிய இவர்க்கு, அவ் வள்ளன்மைக்கேற்ப வளங்கெழுமிய செல்வம் சிறந்து புகழ் வளர்க்கும்.

இங்ஙனம், வீரமும், வெற்றியும், வண்மையும், செல்வமு மொருங்கே வாய்க்கப்பெற்ற இவர்க்கு, உளத்தே கடவுளன்பு பெருக்கெடுத்துச் செல்லுதல் நம்மனோரால் மறக்கற்பாற்றன்று. இவர்கள் அந்தி விழவெடுத்தலும், அதனை யெடுத்தற்பொருட்டு, புண்ணிய நீராடி, மாசற விளங்கும் யாக்கையராய், நறிய மணந் தருவனவற்றைப் பெரிது அணிந்து, அவ் வணிதலா லெழும் மணம் கமழ் நாற்றம் தெருவுடன் கமழச் செல்லுதலும் நினைந் தொறும் பேரின்பம் பயப்பன. நிற்க, இவர்கள் எடுக்கும் விழாவினைக் காணும் மகளிர் நிரைநிலை மாடங்களின் அரமியந்

தோறும் நின்றும், தாமணிந்துள்ள பொற்பூண்களொடு சீறடிச் சிலம்பு புலம்ப இழிந்தும் விழாக்காண்டலும், அதுகாலை அவர் தந்தோற்றம் வானர மகளிரதொப்ப, ஆய்ந்த பொன்னாற்செய்யப் பட்ட இழைகளுந்தொடிகளும் பேரழகு செய்தலும், அகக்காட்சி யால் (Imagination) நோக்குவார்க்குத் தோன்றாது ஒழியா. பின்னர், நாயன்மார்கள் எழுந்தருளுங்கால் எடுக்கப்படும் "திண்கா ழூற்ற வியலிருவிலோதம்" (பெரிய அகன்ற கொடிகள்) காற்றசை வினால் தெண்கடற் றிரைபோலப் புடைப்ப, அம்மகளிரது ஒண் குழை திகழும் ஒளிகெழு திருமுகம், மழைக்கண் மறையும் மதிய மொப்பத் தோன்றுபு மறையும். இனி, இச் செல்வர்கள், மழு வாள் நெடியோனை முதல்வனாகக்கொண்டு ஏனைத் தெய்வவொளி யும், வாடாத பூக்களும், இமையாத நாட்டமும், நாற்றவுணவு (அவிபுணவு)ங்கொண்ட வருகெழு பெரியோராய மாயோன், முருகன் முதலிய கடவுளர்கட்கு உயர்பலி கொடுத்து அவ்வந்தி விழவினை முடிப்பர். அக்காலை, எழும் தூரியங்களின் ஒலி அலை கடலையு மடக்கும்.

கொண்டி மகளிர் (பரத்தையர்):—

இவர் *வானர மகளிரையொத்த வனப்புடையவர். மேலும் இவர் நீனிற விசும்பின்கண் அமர்ந்து விளையாட்டயரும் அம் மகளிரையொப்பவே, தம்மைக் காண்பவர் மனத்தை வருத்தி, அவரது பொருளைக்கவரும் பரத்தையராவர். இவர்கள் ஒண்சுடர் பரப்பும் விளக்கங்களின் நல்லொளியில், பலராகச் சேரநெருங்கி, ஆழ்ந்த நீர் நிறைந்த துறைகளின்முன் பரந்து கிடக்கும் நுண் மணலிற் கூடியாடுவர். அக்காலை, முதல்யாமத்தில் வாசித்தற் குரிய யாழிசை யொரு மருங்கு எழ, அவ்விசைக் கேற்ப, இவர்கள் தாழ்ந்தும், அருகே ஒலிக்கும் முழவொலியொடு ஒத்தும் மனமகிழ்ந் தாடுவர். இங்ஙனம் மணல் விளையாட்டு முடிந்ததும், அவ்விடத்தினின்றும் நீங்கி, குவளைமலர், நீர்க்கீழ்ச் செவ்வரும்பு

---

* வானரமகளிரின் வனப்பு முருகாற்றுப்படையில் 'மால்வரை நிவந்த' என்பது முதல் 'வேங்கை நுண்டாது அப்பிக் காண்வர' என்பது வரை யுள்ள அடிகளிற் காண்க.

முதலியவற்ருற் ெறடுக்கப்பெற்ற மாலைத்தொடர்பல, தம் ஆடையின் வடிம்பில் விழும்வண்ண முடுத்து, நீர் திரண்டாற்போன்ற வெண்பூமாலைகளைக் கொண்டையிற் சூடிச் சேயரும் அணியருமாகப் பலராய்த் தம் நலன் நயந்து வரும் பல இளமையுஞ் செல்வமு மிக்காரை, வஞ்சனையும் பொய்யுங் கலந்த சொற்களால், முதலிற் கூட்டிக்கொண்டு, அவரது நுண்பூணாகம் தம் ஆகத்தில் வடுக்கொள்ளும் வகையில் முயங்கித் தம் பொய்யின்பத்தை யவர்க்கு நல்குவர். அங்ஙனம், அன்புடையார்போல் முயங்கிய முயக்கத்தை அவர் பொருள் தருமளவு மறைத்தலாலும், கருத்து முற்றும் நயந்துவந்தவருடைய செல்வத்தைக் கவரும் முறையிலே யீடுபட்டிருத்தலாலும் இவர்கள் தரும் இன்பம் பொய்யின்பம் எனப்படுகின்றது. அவர்கள் செல்வம் முற்றும்கெடத் தாம்வாங்கி, நுண்தாது உண்டு பின்னர் அத் தாது நிறைந்துள்ள பூவினைத் துறந்து செல்லும் மென்சிறை வண்டினம் ஒப்ப, அவர் கூட்டத்தை, (தம்மைப் புணர்ந்து, தம் பெருஞ் செல்வத்தை யிழந்தோரது கூட்டத்தை,) அவர் நெஞ்சம் ஏமாந்து கலங்க, இம் மகளிர் நேரே கைவிட்டுப்பிரிந்து செல்வர். செல்பவர் மீண்டும், தம் பொலிவு குலைந்துகிடக்கும் பணிகளையும் ஒப்பனைகளையும் பெருமையும் அழகும் நன்கமையப் புனைந்து, மிகு நல மெய்தினவராய்ச்செங்கழுநீர் மலர்களில் சுரும்புபடுவனவும், ஏனைப்பூக்களும் கொண்டு, மழைக்கு மலர்ந்த மலர் நெருங்கிய ஒரு சிறு தூறெனப்பத் தம் குழலிற் சூடி, போதவிழும் அப்புதுமலர்களின் நறுமணம் தெருவெங்கும் கமழ, வளைகுலுங்கக் கைவீசி, மணங்கமழ் மனைதோறும் பழந்தேர் வாழ்க்கைப் பறவைபோற் சென்று, பொருள் தருதற்குரிய இளையோர் பலருடன் விளையாட்டயர்வர்.

பாசிழைமகளிர் :—இவர்கள் குடிப்பெண்களாவர். இவர்களுடைய இல்லங்கள் அணங்குடைய நல்லில்லங்களாகும். இவர்கள், கொழுங்குடிச் செல்வரும் பிறரும் மேய தம் இல்லத்திருந்து, மணம் புணர்ந்தோங்கிய பசிய இழையும் ஒட்டற்ற பொன்வளையலும் அணிந்து, இராக்காலங்களில், ஒண் சுடர் விளக்கங்களின் நல்லொளியிலமர்ந்து, இசையேழும் வாய்த்த சீரிய சிறிய யாழெடுத்து, பண்முறையில் மாறியிசைத்துத் தம்மை நயக்கும் ஆருயிர்க்

காதலர்க்குச் செவிச்சுவையமுதம் சிறக்கவூட்டித் தழுவி, தம் உயிரினுஞ் சிறந்த நாணையுந் தம்மிடத்தே தடுத்துக் கொள்ளுந் தகுதி மேம்பட்டவராவர்.

வளமனைமகளிர் :—இவர் பெருங்குடிப் பிறந்து பெருமையும், செல்வஞ் செழிக்கும் சிறப்புங்கொண்ட மனைமகளிராவர். இவருட்சிலர் "இருமை யின்பமும் பயக்கும் அறிவறிந்த மக்களைப் பெற்றேம்" எனத் தம் கணவருப்ப, மக்களைப்பயந்து, மெலிவு மேவும் புனிறும் தீர்ந்து, இறைவனருளால் ஓர் இடுக்கணும் அற்றுக் குளத்து நீராட்டயர்வர். அதுகண்டு, தலைச்சூல் கொண்ட மகளிர், தாமும் இங்ஙன் ஒரு இடுக்கணுமின்றி மக்களைப் பெறுதல் வேண்டுமெனக் கடவுளைப்பரவிக் குறைதீர்ந்தபின், பொலிந்த சுற்றத்தாரோடு, வழிபாட்டிற்கு வேண்டப்படும் பொருள்கள் பலவற்றுடன், பெருந்தோள் கொண்ட சாலினி என்னும் தேவராட்டியோடு, திவவினை யாழின் தண்டில் நிறுத்திச் செவ்வழிப் பண்ணிசைத்து, குரல் எனப்படும் நரம்பு கூடும் வன்னத்தால் நலம்பரப்பி, அப்பண்ணுக்கும் வன்னத்துக்கும் ஒப்ப முழவங்கள் ஒலிப்ப, மெல்லிய சிறுபறை (ஆகுளி) கறங்க, மகளிர்பலர் விளக்கேந்தி முன்செல்ல, நன்மாமயிலென மென்மெல நடந்துசென்று சூழ்வந்து, கையாற்றொழுது வணங்கிய பிறகு, தாம் படைத்த பாற் சோறு முதலிய மடைப்பொருள்களை யுண்பர்.

ஊர்காப்பாளர் :—இராக்காலங்களில் மூன்றும் யாமத்தில் ஊரைச்சுற்றித் திரிதரும் காவலராவர். பிடியானையின் தோல் போலும் இயற்கைக் கருநிறம் வாய்ந்த இருணிறக் கருஞ்சட்டையும், மரந்துணிப்பினும், கல் உடைப்பினும் வாய்மடியாக் கூர்மை கொண்ட நிலமகழும் உளியும், தூக்கிட்டவாளும், தொடுதோற் கோத்த செருப்புமே இவர்கள் கையகத்திருப்பன. இவர்கள் கண்மாறுடவர் (விழித்தகண் இமைக்கு மளவிலே மறைகின்ற கள்வர்) ஒடுங்கும் ஒதுக்கிடங்களை நுனித்து, பிறர் தெரியாதபடி ஆண்டு மறைந்து நின்று, வயக்களிற்றின் வரவு பார்க்கும் வயப்புலிபோல, விரைந்த வுள்ளமொடு நோக்கும் துஞ்சாக் கண்ணும், பேய் முதலியவற்றிற்கும் அஞ்சாக்கொள்கையும் உடையர். அன்றியும்,

இவர்கள், களவுத்தொழில் வல்லாராற் சிறப்பித்துக்கூறப்படும் தொழில் நுட்பங்களை யெளிதில் அறிந்தாளும் ஆண்மையும், நுண்மைசெறிந்த அரிய நூல்கள் பலவும் ஆராயும் நுண்ணறிவும் படைத்தவர். இவர் கட்புலனுகி, பின்னர்த் தப்பக் கருதி முயல்வார்க்கு ஒருகாலும் தப்புதல் இயலாது. இவர்கள் ஊக்கருங்கணையினராதலின், அது கூடாது போகின்றது. நிற்க, இவர்களுடைய தொழில் நயப்போ (Love towards the discharge of duties) யாவரும் மிகப் போற்றற்பாலதாம். தேர் வழங்கு தெருவில் நீர் திரண்டொழுகுமாறு, பெருமழை பெய்யும் நடுநாள் யாமத்தும், இவர்கள், ஒரு சிறிதும் அசைவு இலராகி நின்று, தம் தொழிலை நயம் வந்து செய்தொழுகுகின்றவர். இனி, இப்பெற்றியாராய காவலர் இருந்த நாளில் களவுத் தொழில் மேற்கொண்டிருந்த கண்மாருடவர், இயல்பு ஒருசிறிது கூறப்படுகிறது. இவ்வாடவர் கருநிறமும் நுண்மையுங் கொண்ட சேலை யொன்றையரையிற் கட்டி, அதன்கண் கூரிய சொட்டை (உடைவாள்) கீளைச் செருகி, இரு துடைகட்கும் இடையிற்செலுத்திப் புறத்தே தெரியாமல் மறைத்துக்கொள்வர். பின்னர் பல நிறங்களமைத்துப் பொலிவு செய்யப்பெற்ற நீலக்கச்சினையணிந்து, அதன் கீழ் மெல்லிய நூலேணி யொன்றைச் சுற்றிக்கொண்டுமிருப்பர். இவர்களின் நசை முற்றும் செல்வர்கள் வைத்துள்ள பேரணிகலங்களின் மேலதாகவே நிற்கும். (இவரது தொழிற்றிறம் முதலியவற்றைப் பொருளாராய்ச்சியிற் கூறுகின்றேன்.)

அரசனுல் இன்பநுகரப் பெறுதற்குரிய மாதர் :—அரசன் தன் அரசிருக்கை நகராகிய மதுரையின் கண்ணிருந்து இவர்கள் பொற்கலங்களில் தரும் இன்பக்குடியினை யுண்டு துயில்கொள்ளப் புகுவது மரபு. காமபானமெனப்படுவது

"பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் தீங்கனி யுதிர்ந்தென
புள்ளெறி பிரசமொடு ஈண்டிப் பலவின்
நெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல்"

போலும் ஒருவகைத் தேறல். இது நறும்பூக்களிலிருந்து பெறப்

படுதலின் நறுமணமும் இன்சுவையும் மிக்குளது. இதனை யுண்ட பின்னரே மன்னன் பள்ளிக்குச் சேறலும் துயில் கோடலும் நிகழும். அவர்க்குப் போகமகளிராகும் இவர்களது வனப்பு ஈண்டுக் கூறப்படுகிறது.

நாற்றிசையும் தம் சினைகள் படர்ந்து செந்திப்போலும் பூக்கண் மலர்ந்து சுரும்பு முரல, அழகுமிக்கு விளங்கும் அசோகம் பொழிலொன்றில், பகல் முற்றும் சுடர் பொழிந்து குடவரையேறிய விளங்குகதிர் ஞாயிறு தன் இளவெயில் பரப்புங்காற் றோன்றும் வண்ணமும் வனப்பும் பொருந்திய மேனியுடையராய், நடுவே மணிகள் வைத்திழைத்த தாவில் பொற்கலன்கள் அணிந்து விளங்கும் இம்மகளிர், தம்பெறலருங் கற்பினால், உலகமுற்றும் விளக்க முறும்படி மேம்பாடு பெற்றவராவர். இவர்கள் மயில் போலும் சாயலும் மாவின் தளிர்போலும் மேனியும், அத்தளிரின் புறத்திருக்கும் ஈர்க்குப்போலும் திதலையுமுடையவர். இவர் தம் பற்கள் ஒண்மையும் கூர்மையும் பெற்றவை. வளவியகாதுகள் ஒள்ளியமகரக்குழை யணியப்பட்டுத் தாழ்ந்து விளங்கும். மேலும், இவர்கள் குளங்களில் நெருங்கியிருப்பதும், நெருப்புப் போலும் இதழ்களை யுடையதாய்த் தெய்வங்கட்கு உரியதுமாகவுள்ள தாமரையின் தாதுபடும் பெரிய பூப்போலும் வாண்முகத்தினராய்க் கைகளில் ஆய்தொடி பூண்டு விளங்குவர். இவர்களோடு கோதையாற் பொலிந்த சேக்கைக் கண் மன்னன் இன்பநுகர்ந்து இன்றுயில் கொள்வன்.

மாலைகாலச்சிறப்பு:—

நெடுநகராய மதுரையின் எல்லையெல்லாம், பகல் முற்றும் ஒளியும் வெப்பமும் ஒருங்குகொன்று, தன் சினமாறியதெனும் வகை, ஞாயிறு தன் ஒளியைச் சோக்கொண்டு குடமுதற்குன்றம் சேர, குணமுதல் வரையில் முழுமதியந்தோன்றித் தன் நிலவு விரித்துப் பகலெனும்படி இரவுச் செய்யும். பெண்மைச் சிறப்பும் மான்பிணைபோலும் நோக்கமுமுடைய மகளிர், நெடுஞ்சுடர் பரப்பும் விளக்குக்களையேற்றி, பலவேறு வகைப்பட்ட அணி

களைப் புனைந்து, தண்ணறுங் கழுநீர் மலரை மாலையாகத்தொடுத் தணிந்து, தாம் தம் கூந்தலிற் பூசிய நறுவிய மயிர்ச் சந்தனத்தை அலைத்து நீக்கிக் கத்தூரி, சந்தன முதலியவற்றை யரைத்து ஒன்றாகக்கலந்து பூசி, மென்னூல் ஆடைக்கு நறும்புகை யூட்டி யுடுத்து விளங்குவர். நயந்த காதலரைப் பிரிந்த மகளிரோ வருந்துதல் செய்வர்.

இரவுச்சிறப்பு : முதல்யாமம் :—

இவ்யாமத்தின்கண், மேற்கூறப்பட்ட கொண்டி மகளிர் பொருள் தருதற்குரிய இளைஞரோடு விளையாடி, அவர் மனத்தைக் கரைத்துத் தம்வயப்படுத்த முயலுவர். பாசிழைமகளிர் தம் கணவர்க்கு யாழிசையும் முயக்க வின்பத்தையுந்தந்து, தம் உயிரினுஞ் சிறந்த நாணைக் காத்துக்கொள்ளுவர். மாறுபாடுமிக்குப் பொரும் பெரும் போர்களில், நின்ற அடி மாறாமையாற்படும் வடுப்பட்ட நெற்றியும், போரே விரும்பும் உள்ளமும், சுரும்பு மூசும் தும்பைச்பூச் சூடுதலுமுடைய மறவர், (வீரர்கள்) தோட்டியால் வடுப்பட்ட நுதலும், போர்தாங்கும் வன்மையும், பெரிய கையினையுங்கொண்ட பெருங் களிறுகளைக்கொணர்ந்து, கொலைபழக்கு முகத்தால், பலகாலும் எடுத்து ஓட்ட, அக்காலை, அக் களிறுகள் பெருவிசைகொண்டு எழுதலும், அவற்றின் விசையைக் காண்டற்பொருட்டு, இம்மறவர்கள் அவற்றின் முன்பு ஓடிப்பார்ப்பார். அவை தம்மைப் பிடித்துக்கொண்டு தம்மேல் வாராமல் அஞ்சி மீளுதற்கென, அவற்றின் கால்களிற் பொதுக்கும்படி, சில பல கப்பணங்களை*, அவை வரும்வழியில் நிலத்தே சிதறுவர். இப்பயிற்சி முடிந்ததும், இவர்கள் கட்டெளிவை யுண்டு மகிழ் சிறந்து தெருக்களிற் றிரிதருவர். வளமனைமகளிர் புதல்வர்ப் பயந்து புனிற்றுப் மெலிவுந்தீர்ந்து குளநீராடலும், அவரைக் காணும் தலைச்சூல் மகளிர் கடவுளைப் பரவுதலும்

* கப்பணம்—நெருஞ்சி முள்ளுப்போல முனைபடச்செய்யப்பட்ட இருப்புப் பரல்கள். இவற்றையவர் நீலநிறப்புடைவைகளில் வைத்துக் கட்டிக் கொண்டிருப்பர்.

செய்வர். ஒருத்தி நாற்றம், தோற்றம் முதலியவைகளால் வேறு பட்டாளாக, அவட்கு அவ் வேறுபாட்டுக்கண், முருகனால் வந்தது என வெறியாட்டயரும் வேலன் அவுடன் பெற்றோர்க்கு நயம்படக்கூறி, அவரைத் தன் சொல்லால் வளைத்துக்கொண்டு, சல்லி, கரடி முதலிய இன்னியங்கள் கறங்க, கார்காலத்து மலரும் இயல்பினையுடைய குறிஞ்சி மலரைச்சூடி, கடம்புசூடி அழகு மிகும் முருகனைத் தன் மெய்க்கண்ணிறுத்தி, வழிபாடு செய்வன். அதுபோது மாதர்மகளிரும் மதவலி மைந்தரும் தாதுபோலும் எருப்பரந்த மன்றங்களிற் குரவையயர, ஏனையோர் உரையும் பாட்டும் இடை யிடையே விரவப்பாடியும் ஆடியும் மகிழ்வர். இங்ஙனம், பல நிகழ்ச்சிகள் நிகழ்வதனால் பல வேறுவகைப்பட்ட கம்பலை மிகுந்து, பேரிசைகொண்ட நன்னன் என்னும் வள்ளல் கொண்டாடும் பிறந்நாட்கோண்டாட்டத்தன்று எழூம் ஓசையை ஒத்து இமிழும்.

பானாட்கொண்டகங் குல்யாமம் :—(இரண்டாம் யாமம்)

இது பதினைந்தாம் நாழிகையை முடிவாகக்கொண்ட பகுதி யாகும். இதன் கண், சங்குகளை முழக்கும் முழக்கம் ஒரு புடை யடங்கியவிய, பண்டங்களின் விலைகூறி விற்பனை செய்யும் வணிகர் தம் கடைகளின் சட்டக்கால் எனப்படும் கானழச் சாய்த்துத் தம் நெடிய கடைகளை யடைத்துக்கொண்டு இல்லம் ஏகுவர். மடப்பம் மதர்ப்பு முதலிய உயரிய குணங்களும் ஒள்ளிய இழைகளும் கொண்டமகளிர் பள்ளியிற் கண்டுஞ்சல் செய்வர். வரிபொருந்திய தேனிறுலொப்ப, அடை, மோதகம், கரைத்தமாவப்பம் முதலியவற்றை விற்கும் அப்பவாணிகர் அவற்றோடே தூங்குவனராய் உறங்க, கூத்தாடல் பயின்ற வயிரியரும் பிறரும் கூத்தாட் டொழிந்து உறங்க, பாடு அவிந்து அடங்கிய பனிக்கடல்போல் பாயில் கண்வளர்வோர் இனிது கண்ணயர்வர்.

தொடரும்.